Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 மாசி-16 28-02-2005 திங்கட்கிழமை ஓசை -10

177D, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த
சிறி கருமாரி நகையகம்
தற்போது புதியஇடத்தில்...
அசல் 22 கரட் தங்கத்தில் தங்கநகைகளை செய்து பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்
சிறி கருமாரி நகையகம்
205/6, கஸ்தூரியார் வீதி, ராஜா தியேட்டர் கட்டடம், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2225385 (ஜி-11257)

# ஐக்கிய நாடுகள் இலச்சினை பொறித்த ஹெலியின் பறப்பிற்கு சிறில. படைத்தரப்பு அனுமதி மறுப்பு

## ஹெலி தரையிறக்கப்பட்டது

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் சபையின் இலட்சினை பொறிக்கப்பட்ட உலங்குவானூர்தியின் பறப்பிற்கு சிறிலங்காப் படைத் தரப்பு அனுமதி மறுத்து அதனை தரையிறக்கியுள்ளது. இதற்கு முன் அனுமதி பெறவில்லை எனக் காரணம் தெரிவித்துள்ளது.**

சிறிலங்காவில் உள்ள ஒரேயொரு தனியார் உலங்கு வானூர்தியானது டிக்கேன் நிறுவனத்திற்கு சொந்தமானது என்றும் அந்த நிறுவனமே இலங்கையில் குறிப்பிட்ட பெல் ஜெட்ரேஞ்சர் ரக உலங்குவானூர்தியை பயன்படுத்தி வருவதாகவும் தெரிவிக் (12ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்க உதவிகள் கிட்டவில்லை முல்லை வர். சங்கத்தினர் இன்று பேரணி

(முல்லைத்தீவு)

தமக்கு அரசாங்க உதவிகள் எவையும் வழங்கப் படாமையைக் கண்டித்து முல்லைத்தீவு வர்த்தக சங்கத்தினர் இன்று ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்தவுள்ளனர்.

இன்று காலை 11.00 மணிக்கு முல்லைத்தீவுப் பேருந்து நிலையத்தில் ஆரம்பமாகும் இப் பேரணி முல்லை அரசாங்க அதிபர் செயலகத்திற்குச் சென்று அங்கு மகஜர் ஒன்று கையளிக்கப்பட உள்ளதாக முல்லை பிரதேச வர்த்தக சங்கத் தலைவர் மனோ தெரிவித்தார். (20)

## இளவரசர் சார்ள்ஸின் வருகையை முன்னிட்டு மட்டக்களப்பில் இன்ரப்போல் பாதுகாப்பு

பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ் மட்டக்களப்புக்கு வருவதை முன்னிட்டு மட்டக்களப்பு நகரில் விசேட பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நகருக்கு இன்று காலை இளவரசர் சார்ள்ஸ் வருவதை முன்னிட்டு பிரிட்டனிலிருந்து வருகை தந்த இன்ரப்போல் பொலிசார் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன் பக்கிங்காம் மாளிகையின் அரச குடும்பத்துக்குரிய (12ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் ஆழிப்பேரலை அனர்த்த துயர் துடைப்பு கொடிவாரம்

(வவுனியா செய்தியாளர்)

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக இன்று முதல் கொடிவாரம் ஒன்றை நடாத்த வவுனியா மாவட்ட ஆழிப்பேரலை அனர்த்த துயர் துடைப்புக்குழு தீர்மானித்துள்ளது.

இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வவுனியா மாவட்ட ஆழிப்பேரலை அனர்த்த துயர்துடைப்புக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக்கலந்துரையாடலில் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள்,பல்கலைக்கழக மாணவர்கள்,தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் தேசிய கல்வியற் கல்லூரி ஆசிரியப் பயிலுநர்கள், விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செய (12ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கக் கூட்டமும் வித்துடல் விதைப்பும்

சுகவீனம் காரணமாக கடந்த வெள்ளியன்று சாவடைந்த மேஜர் தயானந்தன் (சின்னராசா- தங்க வடிவேல், மாணாங்கனை வல்வெட்டித்துறை) என்னும் மாவீரரது வித்துடல் நேற்று வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்ல புனித விதை குழியில் விதைக்கப்பட்டது.

மேஜர் தயானந்தனின் இல்லத்திலிருந்து வித்துடல் பாண்ட் வாத்திய இசை அணி வகுப்பு மரியாதையுடன் எடுத்து வரப்பட்டு வல்வை மகளிர் கல்லூரி மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

வீரவணக்க நிகழ்வு தமிழீழ மாவீரர் பணிமனையைச் சேர்ந்த இனியவன் தலைமையில் இடம்பெற்றது. பொதுச் சுடர் ஈகச்சுடர் ஏற்றல்களைத் தொடர்ந்து வல்வை விளையாட்டுக் கழகத் தலைவர் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் (12ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டுப்பற்றாளர் ஏரம்பு ஐயாவின் புகழுடல் தீயுடன் சங்கமம்!

(அலுவலக செய்தியாளர்)

நாட்டுப்பற்றாளர் வே.க.ஏரம்பு ஐயா அவர்களின் இறுதி வணக்க நிகழ்வுகள் நேற்று பகல் 10.00 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள தூயவன் அரசறிவியற் கல்லூரியில் நடைபெற்று அவரது புகழுடல் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு கிளிநொச்சி திருநகர் மயானத்தில் புகழுடல் நண்பகல் தீயுடன் சங்கமமாகியது.

நேற்றுக் காலை கிளிநொச்சி தூயவன் அரசறிவியற் கல்லூரியில் நாட்டுப் பற்றாளர் வே.க.ஏரம்பு அவர்களின் புகழுடலுக்கு அவரது துணைவியார், பிள்ளைகள் மலர்மாலை அணிவித்ததைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளின் தளபதிகள், பொறுப்பாளர், போராளிகள்,உற்றார் உறவினர்கள், பொதுமக்கள் மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தி தங்களது இறுதி மரியாதையினை செலுத்தினர்.

அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் புகழுட (12ஆம் பக்கம் பார்க்க)


## பிறர் இயல்பினை ஏற்று அவர்களுடன் இணைந்து செயற்படும் நற்குணமுள்ளவர்

### நாட்டுப்பற்றாளர் ஏரம்பு ஐயாவுக்கு பாலகுமாரன் புகழாரம்

(அலுவலக செய்தியாளர்)

எப்படிப்பட்ட மனிதர் இந்த நாட்டுப் பற்றாளர் ஏரம்பு ஐயா? நான் அறிந்தளவில் பெரிய ஆன்மீகத்தத்துவ உளவியல் தத்துவம் ஒன்று இருக்கின்றது. பிறரோடு பழகும் பொழுது அவரை அன்னியப்படாமலும் அவரை சிறிதும் காயப்படுத்தாமலும் அவரை புண்படுத்தாமலும், அவருடைய இயல்பினை ஏற்றுக் கொண்டு மனிதனாக மதித்து பேணுகின்ற பெரும் பாங்கு இந்த உலகத்திலே மிகப் பெரிய புனிதமாக கருதப்படுகின்றது. அந்த விழுமியத்தை இந்த பெருமகனார் மிக எளிதாக மிக சாதாரணமாகக் கடைப்பிடித்ததை யாவரும் அறிவர் அதில் நானும் ஒருவன்.

(12ஆம் பக்கம் பார்க்க)


குருவடிசரணம் ஓம் சக்தி திருவடிசரணம்

மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர்பீட நாயகனாம்

நம் நடமாடும் தெய்வம்

# ஆன்மிககுரு அருட்திரு பங்காரு அடிகளாரின்

# 65ஆவது அவதார பெருவிழா



ஆன்மிககுரு அருட்திரு பங்காரு அடிகளார்



குருபாத தரிசனம்
பாவ விமோசனம்



மேல்மருவத்தூர் சித்தர்பீடம்



சக்திகளுக்கு அன்னதானம் வழங்குதல்

**காலம்: 03-03-2005 வியாழக்கிழமை**

**நேரம்: காலை 8.01 முதல்**

**இடம்: வழிபாட்டு மன்றம்**



பாடசாலைக்கு மலசலகூடம் அமைத்துக் கையளித்தல்

## நம்குருவின் தொண்டு நெறியில்...



ஆதிபராசக்தி முன்பள்ளிகள் மூலம் சிறார்களுக்கு கற்பித்தல்



வறியமக்களுக்கு உடுபுடவைகள் வழங்குதல்



புலமைப்பரிட்சை மாணவர்களுக்கு உதவு தொகை வழங்குதல்



புதுக்குடியிருப்பு வாரவழிபாட்டு மன்றம்

## அனைவரும் வருக! அன்னதானத்துடன் அன்னை அருள் பெறுக!

இவ் அவதார திருநாளில் அன்னையின் அருளை இறைஞ்சிநிற்கும் - ஆதிபராசக்தி சிறுவர் முன்பள்ளிகள்
கோம்பாவில், கைவேலி, புதுக்குடியிருப்பு.

மற்றும்:~ மேல் மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்கி வாரவழிபாட்டு மன்றம் புதுக்குடியிருப்பு.
பதிவு எண்:F.C.C-02
4ஆம் வட்டாரம், கோம்பாவில், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

தொ.பே: உள்ளூர்: 077-6684742, 077-6624542
சர்வதேசம்: 044-7946511739

குறிப்பு: அன்றைய தினம் காலை நடைபெறும் பாதபூசையில் பங்குபற்றுபவர்களுக்கு ஆன்மீக குருபிரானின் பாததீர்த்தம் வழங்கப்படுவதுடன் ஆலயம் பற்றிய விபரனப் படமும் மாலை 6.00 முதல் காண்பிக்கப்படும்.

"உலகமெல்லாம் சக்திநெறி ஓங்கவேண்டும்
ஒவ்வொருவர் மனக்குறையும் நீங்கவேண்டும்"
(அம்மா)

(சி-11519)

# விடுதலை அடைந்த பெண்களாலேயே தேச விடுதலையை விரைவு படுத்தலாம்

– தென்மராட்சிக் கோட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர்

(தென்மராட்சி)

**விடுதலையடைந்த பெண்களாலேயே,தேச விடுதலையை விரைவுபடுத்த முடியும். எமது தேசியத்தலைவர் இந்த மண்ணை ஆளும் காலமே எம் தேச விடுதலையின் பொற்காலம் எனத் தென்மராட்சிக் கோட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் அலைவாணி தெரிவித்துள்ளார்.**

கைதடியில் இடம்பெற்ற மகளிர் சங்கம நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒரு தேசத்தின் விடுதலை பெண்ணின் விடுதலையிலேயே தங்கியிருக்கின்றது. அந்த அதிசயத்தை, அற்புதத்தை உலகத்திற்கே செயல் வடிவில் நிரூபித்துக்காட்டியவர் எமது தேசியத் தலைவர். அந்தத் தலைவரின் காலத்தில் நாம் வாழ்வதையிட்டு இன்று பெருமை அடைகின்றோம்

இன்று தமிழீழத்தில் அனைத்து துறைகளிலும் பெண்களின் பங்களிப்பு தேச நிர்மாணத்துக்கும் விடுதலைக்கும் வலுச்சேர்த்து இருக்கின்றது.

சற்றுத் தொலைவில் நிற்கும் பெண்களும் நெருங்கி வந்து தமது பொறுப்புணர்ந்து செயற்படுவார்களாயின் விடுதலையின் வாசலை இலகுவில் நாம் அடைய முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (28)

## நிவாரணக் கிளைகள் மீளவும் ஆரம்பிக்கப்படுமா?

(வடமராட்சி)

சுனாமி ஆழிப் பேரலையால் மூடப்பட்ட குடத்தனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிவாரணக் கிளைகள் மீளவும் ஆரம்பிக்கப் படாததால் இப் பகுதியில் தற்காலிக இருப்பிடங்களை அமைத்து குடியேறி வரும் மக்கள் சுனாமி நிவாரணப் பொருட்களை பெற்றுக் கொள்ள பெரும் சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

இப் பகுதி மக்கள் தமது கிராமத்தில் இருந்து அடுத்துள்ள மணற்காட்டுக் கிராமத் திற்கு இரண்டு கிலோ மீற்றர் தூரம் வரை சென்று நிவாரணத்தினையோ அல்லது அத்தியாவசியப் பொருட்களையோ பெற வேண்டியுள்ளது.

எனவே இம் மக்கள் தாம் மீளக் குடியமரத் தொடங்கி நீண்ட நாட்களாகியும் கூட்டுறவுச் சங்கங்கள் இப் பகுதியில் ஆரம்பிக்கப்படாதையிட்டு விசனமடைந்துள்ளனர். (கா)

## சட்ட விரோதமாக கற்கள், மண் அகழ்வு

யாழ். தொண்டமனாற்றுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் கற்கள் மற்றும் மணல் மண் என்பன அகழ்ந்தெடுக்கப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக தொடர்ந்து வரும் இந் நடவடிக்கைகளால் இப் பகுதியின் சூழல் சமநிலையில் பெரும் தாக்கங்கள் நிறைந்து, விளை நிலங்கள் உவர் நிலங்களாவதுடன் நன்னீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படுமெனவும் எச்சரிக்கப்பட்டுள்ள நிலையிலும் இந் நடவடிக்கை தொடர்கிறது.

இது குறித்து சிறிலங்காப் பொலிசாரும் அலட்சியப் போக்கையே கடைப்பிடித்து வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

## வடமராட்சி கடற்றொழிலாளருக்கு இன்று 65 படகுகள் வழங்கப்படும்

சுனாமியால் பாதிக்கப்பட்ட யாழ். வடமராட்சி பிரதேச கடற்றொழிலாளர்களுக்கு படகுகளை வழங்கும் திட்டத்தின் கீழ் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த கியூமெடிக்கா நிறுவனத்தினால் மேலும் 65 படகுகள் வழங்கப்படவுள்ளன.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 1000 படகுகளை வழங்கும் கியூமெடிக்கா நிறுவனத்தின் திட்டத்தின் ஒரு அங்கமாகவே இவ் 65 படகுகளும் வழங்கப்படவுள்ளன.

இப் படகு வழங்கும் நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை தும்பளை, கலப் பணாவத்தை விநாயகர் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

இதே வேளை மேற்படி நிறுவனத்தால் ஏற்கனவே ஒரு தொகுதிப் படகுகள் வழங்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (33,45)

## இறங்குதுறைகள் புனரமைப்பு தொடர்பாக நாளை ஆராய்வு

(வடமராட்சி)

சுனாமியினால் அழிந்து போயுள்ள மீன் பிடி இறங்கு துறைகளை ஆழப்படுத்தும் பணிகளை படைத்தரப்பு தொடர்ந்தும் தடுத்து வருவதால் இது தொடர்பாக ஆராய்வதற்கான விசேட சந்திப்பொன்று நாளை இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறை படை முகாமில் இடம்பெறும் இச் சந்திப்பில் படை அதிகாரிகள் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள், இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் யாழ். அரச அதிபர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (கா)

## நீரிறைக்கும் இயந்திரம் "நிகொட்" வழங்கியது

சாவகச்சேரி நகரசபைக்கு "நிகொட்" திட்டத்தின் கீழ் அதி சக்தி வாய்ந்த நீரிறைக்கும் இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையால் பராமரிப்புச் செய்யப்பட்டுவரும் பொதுக்கிணறுகளை இறைத்து சுத்தம் செய்வதன் மூலம் மக்களுக்கு சேவையை வழங்குவதற்காகவே இந் நீரிறைக்கும் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. (33)

## குடிநீர்க் குழாய் பழுதடைந்துள்ளது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சந்தையின் மத்தியில் உள்ள ஒரேயொரு குடிநீர்க் குழாயும் கடந்த ஒரு மாத காலமாக பழுதடைந்த நிலையில் உள்ளது.

இதனால் வர்த்தகர்கள், வியாபாரிகள், தொழிலாளர்கள், பொது மக்கள் எனப் பல தரப்பட்டோரும் பெரும் அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்டோருக்குத் தெரியப்படுத்தியும் இது வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (28)

## கைதடி விநாயகர் முன்பள்ளிக்கு கற்றல் உபகரணம் அன்பளிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி கோட்ட மகளிர் அரசியல் துறையினரால் கைதடி விநாயகர் முன் பள்ளிக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.



இந்த நிகழ்வில் சர்வதேச மாணவர் பேரவை பொறுப்பாளர் கண்ணன் கலந்து கொண்டு பின் தங்கிய நிலையிலுள்ள இம் முன் பள்ளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியதுடன் இந்த முன்பள்ளிக்குத் தேவையாகவுள்ள பல்வேறு அடிப்படை பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளார். (28)

## அபிவிருத்தி மதிப்பீடு கோரப்பட்டுள்ளது

(வடமராட்சி)

இந்திய அரசின் சார்பில் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் மேற் கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி தொடர்பான மதிப்பீட்டினை இந்திய அரசாங்கம் கோரியுள்ளது என மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி க.கதிரவேற்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இன்னும் ஓரிருதினங்களில் இந்த மதிப்பீட்டினை மேற் கொண்டு அவர்களிடம் கையளிக்க உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (கா)

## கொடுப்பனவு வழங்கல்

பட்டதாரிகளுக்கான அரச துறை வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் கல்வி நிர்வாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கான சனவரி மாதக் கொடுப்பனவுகள் தற்போது வலயக் கல்விப் பணிமனை களில் வைத்து வழங்கப் பட்டு வருகிறது.

எனவே இது வரை சனவரி மாதக் கொடுப்பனவுகளைப் பெறாதோர் வலயக் கல்விப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரி விக்கப்பட்டுளளது. (33)

## இடமாற்றம்

பருத்தித்துறை துறைமுக பிரதேச மத்திய மருந்தகம் இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து பருத்தித்துறை அத்தியடியில்இயங்கி வந்தது.

இது தற்பொழுது பருத்தித் துறை தும்பளை வீதியில் உள்ள தனியார் கட்டடமொன்றிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (33)

## நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். தெல்லிப்பளை வைத்திய சாலையின் அபிவிருத்திப் பணிகளுக்கென ஜப்பானிய அரசாங்கம் 8.9 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கியுள்ளது.

வலிகாமம் வடக்கு இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலய நடை முறைகள் காரணமாக மிக மோசமாகப்பாதிக்கப்பட்டு பல்வேறுபட்ட வசதியீனங்களுடனும் இதுவரை இவ் வைத்தியசாலை இயங்கி வந்துள்ளது (33)

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி யில் நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெற்ற உந்துருளி- முச்சக்கர வண்டி விபத்தில் உந்துருளியை ஓட்டி வந்தவர் காயமடைந்தார்.

மேற்படி வீதியிலுள்ள கட்டைப்பிராய் பகுதியில் இடம் பெற்ற விபத்தில் இருபாலையைச் சேர்ந்த றஞ்சன் (வயது 38) என்பவரே காயமடைந்தவராவரார். (33)

## கோரிக்கை

சுனாமி ஆழிப் பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சுகாதாரப் பரிசோதகர்களுக்கு உந்துருளிகள் வழங்கப்பட வேண்டும் என சுகாதாரப் பரிசோதகர்கள் கோரியுள்ளனர்.

இது குறித்து சுகாதார அமைச்சுக்கு கடிதம் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (33)

## சுகாதாரக் கருத்தரங்கு

யாழ்.மாவட்ட பாடசாலைகளில் சுகாதாரம் மற்றும் விஞ்ஞானம் ஆகியபாடங்களை கற்பித்துவரும் ஆசிரியர்களுக்கான விசேட சுகாதாரக் கருத்தரங்கு வரும் புதன் கிழமையும் வியாழக்கிழமையும் யாழ்ப்பாண சுகாதாரச்சேவைகள் பணிமனையில் நடைபெறவுள்ளது.

எனினும் இக்கருத்தரங்கில் ஆசிரியர்கள் தவிர்ந்த ஆர்வலர்களும் பங்கு பற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## மணற்காடு பாடசாலைக்கு தனிய ன இடவசதி வேண்டும்

(வடமராட்சி)

மணற்காடு பாடசாலைக்குத் தனியான கொட்டகைகள் அமைத்துத் தரப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஆழிப் பேரலையால் அழிந்து போன மணற்காடு றோமன் கத்தோலிக்கத் தமிழ்க்கலவன் பாடசாலை தற்போது குடத்தனைப் பாடசாலையுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது. குடத்தனை பாடசாலை ஏற்கனவே இட நெருக்கடியுடனேயே இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது (கா)

## கலாச்சாரம் பேணும் குழுவால் திருடர்கள் மடக்கிப் பிடிப்பு

பருத்தித்துறை வியாபாரி மூலைப் பகுதியில் பரவலாக இடம்பெற்று வந்த திருட்டுச் சம்பவங்களை அடுத்து அப் பகுதி கலாச்சாரம் பேணும் குழுவினர் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையால் திருடர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.இச் சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றது.

மடக்கிப் பிடிக்கப்பட்ட் திருடர் குழுவினர் பாடசாலை மாணவர்கள் என்பதால் இவர்களது எதிர் கால நலனை கருத்திற் கொண்டு கலாச்சாரம் பேணும் குழுவினரால் எச்சரித்து விடுவிக்கப்பட்டனர். (கா)

# கிண்ணியா அரச வைத்தியசாலைக்குப் பதிலாக

# புதிய வைத்தியசாலையை நிறுவ இத்தாலி உதவி

(திருமலை)

**கடற்கோளினால் அழிக்கப்பட்ட கிண்ணியா அரசாங்க வைத்தியசாலைக்குப் பதிலாக புதிய வைத்தியசாலை இத்தாலிய அரசாங்கத்தினால் நிர்மாணிக் கப்படவுள்ளது.**

இது தொடர்பான உடன்படிக்கை ஒன்று கடந்த வியாழக்கிழமை பிற்பகல் இத்தாலிய அரசாங்கத்திற்கும் சிறிலங்கா சுகாதார அமைச்சுக்கும் இடையே கைச்சாத்திடப்படடுள்ளது.

இத்தகவலை திருகோணமலை மாவட்டப் புனர்வாழ்வு. புனரமைப்பு அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான நஜீப் அப்துல் மஜீத் தெரிவித்தார். கிண்ணியா பிரதான வீதியில் முன்பு புதிய வைத்தியசாலை நிர்மாணிக்கப்படவிருப்பதாகவும் அமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் தெரிவித்தார். ஆரம்பத்தில் ஒரு மாடிக்கட்டடமாக அமையலாம் என்று எதிர்பார்க்கும் புதிய வைத்தியசாலை, பின்னர் விஸ்தரிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (25)

# கிளி.நகர மின் விநியோக நேரம் நாளை முதல் நீடிப்பு

கிளிநொச்சி நகரமும் அதனை அண்டிய பகுதிகளுக்கும் ஒரு மெகாவாற்ஸ் ஜெனரேட்டர் மூலம் பரீட்சார்த்தமாக வழங்கப்பட்ட மின்சார விநியோகத்தில் நாளை தொடக்கம் இரவு 12.00 மணியிலிருந்து அதிகாலை 4.30 மணிவரை மின் விநியோகம் நிறுத் தப்படும் ஏனைய நேரங்களில் மின்சாரம் தொடர்ச்சியாக வழங்கப்படுமென மின்சாரசபையினர் பாவனையாளர்களுக்கு அறியத் தருகின்றனர். (சோ)

# சுனாமியால் பாதிப்புற்று நிவாரண பணத்தைப் பெறாதோர் கவனத்திற்கு

(முல்லை)

சுனாமியினால் உயிரிழந்த மக்களுக்கான உடனடி நிவாரணப் பணமான ரூபா 15000 இதுவரை பெறாதவர்கள் முல்லை மாவட்ட அரச அதிர் செயலகத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு புனர்வாழ்வுக் கிளை பிரதிப் பணிப்பாளர் சி.குணசிங்கம் தெரிவித்தார். இவற்றுடன் இதுவரை சமயல் உபகரணங்களுக்கு வழங்கப்பட்ட 2500ரூபாய பெற்றுக் கொள்ளாதவர்களையும் கச்சேரியில் வந்து பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (20)

# தற்காலிக வீட்டுத்திட்டத்தில் முன்பள்ளி திறந்து வைப்பு

(முல்லை)

தமிழீழ நிர்வாக சேவையின் ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கை நிறுவனம் சிலாவத்தை அன்னம்மாள் கோவிலடியில் அமைத்த தற்காலிக வீட்டுத்திட்டத்தில் முன்பள்ளி மாணவர்களின் நன்மை கருதி அமைக்கப்பட்ட முன்பள்ளியின் திறப்பு விழா கடந்த வியாழனன்று தமிழீழ நிர்வாகசேவைப் பணியாளர் கண்ணன் தலைமையில் இடம்பெற்றது.

மங்கல விளக்கினை ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கை நிறுவனப்பொறுப்பாளர் சுட்டா, தமிழீழ நிர்வாக சேவை நடுவப் பணிமனைப் பொறுப்பாளர் சின்னப்பா மாஸ்ரர் ஆகியோர் ஏற்றினார்கள்.

தமிழீழத் தேசியக்கொடியினை முல்லை.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றி வைக்க கட்டடத்தினை ஜேர்மன் அக்றோ அக்சன் நிறுவனத்தலைவி நாடாவினை வெட்டித்திறந்து வைத்தார். தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியினை த.பு.க.பணியாளர் பாலா ஏற்றினார்.

கருத்துரைகளை தமிழீழ நிர்வாகக் சேவையின் ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கை நிறுவனப் பொறுப்பாளர் சுட்டா, ஜேர்மன் அக்றோ அக்சன் நிறுவனத்தலைவி ஆகியோர் வழங்கினார்கள்.

தொடர்ந்து முன்பள்ளி மாணவர்களுக்கான கற்றல் உபகரணம், பாடசாலைப்பை என்பன தமிழீழ மாணவர் அமைப்பினரால் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முன்பள்ளி நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர்கள், சேவாலங்கா பிரதிநிதிகள், முன்பள்ளி ஆசிரியர்கள், தமிழீழ நிர்வாகசேவைப்பிரதிநிதிகள், ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கை நிறுவனப்பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (20)

# நவீன நெல் அறுவடை இயந்திரம் மன்னார் மாவட்டத்தில் அறிமுகம்

மன்னார் மாவட்ட விதை உற்பத்தியாளர் சம்மேளனத்தின் ஒழுங்குபடுத்தலுக்கமைய வன்னி வேளாண் தொழில் நுட்ப நிறுவனத்தால் கடந்த புதன்கிழமை கறுக்காய்குளம் பகுதியில் அரிவு வெட்டி சூடடிக்கும் நவீன பொறி அறிமுகம் செய்யப்பட்டது.

மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நீக்கிலாப்பிள்ளை, மன்னார் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் உசைன், மன்னார் மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர் திருமதி -ஸ்ரான்லிடிமெல் ஆகியோர் இவ் அறுவடை நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

குறுகிய நேரத்தில் கூடுதலளவான இடப்பரப்பை அறுவடை செய்ததை அவதானித்து மேலதிக அரசாங்க அதிபர் கருத்துக் கூறுகையில், நீர்ப்பாங்கான நிலத்தில் வீழ்ந்த நிலையிலுள்ள நெல்லையும் வெட்டும் பொறி அறிமுகமானது வரவேற்கத்தக்கது. மேலும் பல பொறிகளை இறக்குமதி செய்து வேளாண் செய்கையை மேம்படுத்த சகலரும் ஒத்துழைக்க வேண்டுமென்றார்.

உதவிவலயப் பணிப்பாளர், கமநல சேவை உதவி ஆணையாளர் மற்றும் உணவு விவசாய திட்டப்பிரதிநிதி சிவலிங்கம் ஆகியோரும் கருத்துரைகளை வழங்கினார்கள் வேளாண் அபிவிருத்தியை முதன்மைப்படுத்தும் வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம் ஆரம்ப முயற்சியாக 04 பொறிகளைத தருவித்துள்ளது. இரண்டொரு தினங்களில் மேற்கொண்டு 06 பொறிகள வரவுள்ளதாக நிறுவன பொது மேலாளர் புவனேஸ்வரன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருமளவான வேளாண் செய்கையினர்களும் விவசாய அமைப்புச் சார்ந்தவர்களும வன்னி வேளாண் தொழில் நுட்ப நிறுவனப் பணிப்பாளர்கள், பணியாளர்கள் ஆகியோரும் கலந்து கொண் டனர்.

# பச்சிலைப்பள்ளி பிரதேச உணவகங்களில் சுகாதாரப் பகுதியினர் திடீர் சோதனை!

## -பழுதடைந்த உணவுப் பொருட்களும் கண்டுபிடிப்பு

(வடமராட்சி)

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்துக்கு உட்பட்ட உணவகங்கள், தேநீர்க் கடைகள், வெதுப்பகங்கள் போன்றவற்றைக் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சுகாதார பணிமனையினரும், பச்சிலைப்பள்ளி பொது சுகாதார பரிசோதகர், தமிழீழ சுகாதார சேவையினர், வடமராட்சி கிழக்கு /பளை இணைப்பாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபையினர் இணைந்து திடீர் ஆய்வுகள் மேற்கொண்டனர். அதன்போது பழுதடைந்த உணவுப் பொருட்கள், பதனிழந்த உணவுப்பண்டங்கள் என்பன கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதுடன், சுகாதாரக் குறைபாடுகள் உள்ள நான்கு உணவகங்கள் உணவு தயாரிப்பதற்கு தற்காலிகமாக நிறுத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் அனைத்து உணவு கையாளும் நிலையங்களுக்கும் தொற்று நீக்கி மருந்து விசிறப்பட்டு உணவக உரிமையாளர்கள், பணியாளர்களுக்கு நோய்த்தடுப்பு ஊசி ஏற்றப்பட்டது. நெருப்புக் காய்ச்சல் தடுப்பு ஊசி ஏற்றப்பட்டவர்களுக்கு அடுத்த கட்டத் தடுப்பூசி எதிர்வரும் புதன்கிழமை ஏற்றப்படும் என்று சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை யினர் தெரிவித்தனர். தடுப்பூசி ஏற்றப்பட்டவர்களுக்கு அதனை உறுதிப்படுத்தும் அட்டை வழங்கப்பட்டது. (11)

# பேடன் பவல் நினைவு நிகழ்வு

(மல்லாவி)

சாரணிய தந்தை பேடன் பவல் பிரபுவின் 148 ஆம் ஆண்டு பிறந்த தினத்தை முன்னிட்டு நிகழ்வு ஒன்று அனிஞ்சியன்குளம் தமிழ்க்கலவன் வித்தியாலயத்தில் கடந்த 22 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெற்றது. ஆசிரியர் சு.சுபநேசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் மங்கல விளக்கினை ஆசிரியை திருமதி வசந்தி சந்திரபாலன், மாணவர் அமைப்பு இணைப்பாளர் செல்வி அ.தர்ஷா ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியை துணுக்காய்ப் பிரதேச அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் கெ.புனிதன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து சாரணர் கொடியை அதன் ஆசிரியைதிருமதிந. சர்வேஸ்வரன் ஏற்றினார். அகவணக் கத்தைத் தொடர்ந்து பாடசாலை முதல்வர் கு. ஜெகதீஸ்வரன், மு/மல்லாவி மத்தியகல்லூரி ஆசிரியர் இ.மகாலிங்கம், திருமதி வசந்தி சந்திரபாலன், திருமதி ந.சர்வேஸ்வரன், பிரதேச அரசியல் துறை நிர்வாகப் பொறுப்பாளர் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

சாரணிய தந்தை பேடன்பவல் பிரபுவின் நினைவாக பாடசாலையில் 30 மாணவர்களுக்குச் சாரணிய சின்னம் சூட்டப்பட்டது. இரவு தீப் பாசறை நிகழ்வுகள் இடம் பெற்றது. (24)

## -சுனாமி அனர்த்தம் காரணமாக-

# திருமலையில் 12 வயதுக்குட்பட்ட 22,265 சிறுவர்கள் இடம் பெயர்வு

(திருமலை)

கடற்கோள் அனர்த்தம் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் இடம் பெயர்ந்த 12 வயதுக் குட்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை 22,265 என்று திருகோணமலை மாவட்டச் செயலக அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் வாரியாக விபரம் வருமாறு:- திருகோணமலைப் பட்டினமும் சூழலும் -6,480, கிண்ணியா -5,694, மூதூர்- 5,782, சேருவில- 284, குச்சவெளி 2,233, ஈச்சிலம்பற்று-1,812. (25)

# சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பெரிய பரந்தனில் அபிவிருத்தி நடவடிக்கை

(கண்டாவளை)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நிகொட் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் சமூக அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் த.பு.க.வினால் மேற்கொள்ளப்படும் தேவைப்பகுப்பாய்வுக் கலந்துரையாடல் கடந்த வியாழனன்று பெரிய பரந்தன் பகுதியில் பி.ப 1.30, மணிக்கு அபிவிருத்திச் சங்கத்தலைவர் சிவபாதம் தலை மையில் பொது நோக்கு மண்டபத் தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் மங்கல விளக்கினை சி.சே.கேதீஸ்வரன், மாவட்ட த.பு.க.திட்ட அலுவலர் திவாகர் ஆகியோர் ஏற்றினர். இந்நிகழ்வில் த.பு.க. மாவட்ட இணைப்பாளர் ரவிக்காந்த் உரைநிகழ்த்துகையில்; இத்திட்டமானது போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளையும், உட்கட்டுமான வேலைகளையும் மேற்கொள்வதற்கு 50 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், மக்களால் தெரிவிக்கப்படும் வேலைத்திட்டங்களுக்குப் பயன்படுத் தப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் குடிநீர், உவர்நீர் தடுப்பு, கழிவுநீர் ஓடும் ஆறு புனரமைப்பு, உள்ளூர் சிறுவீதிகள், முன்பள்ளி, தாய்சேய் சிகிச்சை நிலையம், வருமான தொழில் முயற்சி போன்றவற்றைச் செய்து தருமாறு மக்களால் தெரிவிக்கப்பட்டது. (14)

# 2005- பிரதேசஅபிவிருத்தித் திட்டங்கள் குறித்து துணுக்காய் அரசியல்துறையில் கலந்துரையாடல்

(மல்லாவி)

துணுக்காய்ப் பிரதேசத்தில் 2005 ஆம் ஆண்டுக்கான பிரதேச அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கான கலந்துரையாடல் நிகழ்வு பிரதேச அரசியல் துறை செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் கடந்த 22 ஆம் திகதி பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் கா.செல்வன் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் பிரதேசத்தின் அபிவிருத்தி குறித்த திட்டங்களைத் தெரிவு செய்து குறிப்பாக மக்களின் வாழ்விடங்களுக்கு செல்லும் பிரதான வீதிகள், மின்சார வசதிகள், பொதுக் கிணறுகள் அமைத்தல், இடம் பெயர்ந்தோர்களை குடியமர்த்தி அபிவிருத்திகளை மேற்கொள்ளவும். ஏனைய அபிவிருத்தித் திட்டங்களையும் இதற்கான ஒழுங்குகளையும் மாவட்ட அரச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு தீர்மானித்தல் போன்ற விடயங்களும் ஆராயப் பட்டன.

இதில் துணுக்காய் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் அ.அமிர்தலிங்கம், துணுக்காய் பிரதேசத் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. காந்தி சிறிகாந்தராஜா, பாண்டியன்குளம் துணுக்காய் அபிவிருத்தி கழக இணைப்பாளர் க.ஜீவகாருண்ணியம், முல்லை மாவட்ட அரசியல்துற்ற மகளிர் பொறுப்பாளர் செல்வி வேழினி ஆகியோர் கருத்துக்களை வழங்கினர். (24)

# சுகாதாரத்தைப் பேண வலியுறுத்து

(முல்லை)

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் செயற்பட்டு வரும் சர்பத் நிலையங்களை மிகவும் சுத்தமான முறையில் பராமரித்து சர்பத்துக்களை விநியோகிக்குமாறு தமிழீழ சுகாதார சேவையினர் தெரிவித்துள்ளனர்.

இதன் அடிப்படையில் குடிநீருக்கு ஒதுக்கப்பட்ட நீரைப் பாவிக்குமாறும், அதேவேளை ஐஸ்கட்டி பாவித்து சர்பத்துக்களைத் தயார் செய்ய வேண்டாம் எனவும் மாறாக ஐஸ் கட்டி பாவித்து சர்பத் தயாரிததால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். தெரிவித்திருப்பதுடன், தமிழீழ சுகாதார சேவையின் ஆலோசனையைப் பெற்று சர்பத் கடைகளைத் தொடர்ந்து நடத்துமாறும் தெரிவித்துள்ளனர். அதேவேளை சுத்தமான ஐஸ் கட்டி என தமிழீழ சுகாதார சேவை சிபார்சு செய்ததை மட்டும் பாவிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளனர். (20)

# காஷ்மீரின் உண்மை நிலையை கார்கில் போர் உலகிற்கு உணர்த்தியது

(இஸ்லாமபாத்)

**"கார்கில் போர் நமது முக்கிய எதிரிகளான இந்தியர்களுக்கு ஒரு பாடமாக அமைந்தது. காஷ்மீரின் உண்மை நிலையை உலகத்திற்கு உணர்த்தியது" என்று பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் கூறியுள்ளார்.**

இணையத் தளத்தில் வெளியிட்டுள்ள சுயசரிதையில் அவர் கூறியிருப்பதாவது;

இந்தியா-பாகிஸ்தான் இடையே பஸ் சேவை தொடங்கப்பட்டது மிகவும் புகழ்ந்து பேசப்பட்டது. அதைத் தொடர்ந்து கார்கில் போர் ஏற்பட்டது. இப்போர் உண்மை நிலையை உலகத்திற்குப் புரிய வைத்தது.

முன்னாள் பிரதமர் வாஜ்பாயுடன் பாகிஸ்தானில் பேச்சுவார்த்தை நடத்தியது இது இந்திய- பாகிஸ்தான் உறவில் திருப்பு முனையை ஏற்படுத்தியது. ஆனால் தேர்தலில் பா.ஜ.க தோல்வி அடைந்தது. இரு நாடுகளின் இடையிலான உறவில் தேக்க நிலையை ஏற்படுத்தியது.

ஆனால் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தின்போது என்னை சந்தித்துப் பேச மன்மோகன்சிங் முடிவு செய்தது இத்தேக்க நிலையை உடைத்தது.

நியூயோர்க்கில் இருவரும் கூட்டாக அறிக்கை வெளியிட்டோம் ஜம்மு-காஷ்மீர் உள்ளிட்ட பல பிரசசினைகளைத் தீர்ப்பதற்கு வழி காட்டும் வகையில் இது அமைந்தது.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு எதிரான நடவடிக்கையை நான் முதலில் தொடங்கவில்லை. நான் வெளிநாட்டு சுற்றுப் பயணத்தில் இருந்தபோது என்னை நீக்கிவிட நவாஸ் ஷெரீப் நடவடிக்கைகளைத் தொடங்கினார். நான் மேற்கொண்ட எதிர் நடவடிக்கை நாட்டின் ஆட்சியையே என்னிடம் ஒப்படைத்தது என்றுள்ளார் முஷாரப்.



-முஷாரப்



லெபனானில் சமீபத்தில் நடந்த குண்டு வெடிப்பில் முன்னாள் அதிபர் உட்படப் பலர் பலியானார்கள். இது தொடர்பாக விசாரணை நடத்த ஐ.நா குழுவினர் சம்பவ இடத்தைப் பார்வையிட்டனர்.


## ஈராக்கிய பொதுமக்களைத் துன்புறுத்தினர் மூன்று பிரிட்டிஷ் வீரர்களுக்குச் சிறைத்தண்டனை

(ஓஸ்னாபுரூயக்)

ஈராக் மக்களைத் துன்புறுத்தியதாகத் தொடரப்பட்ட வழக்கில் பிரிட்டிஷ் இராணுவவீரர்கள் மூவருக்கு சிறைத்தண்டனை அளித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

டேனியல் கென்யன்(வயது-33) என்ற வீரருக்கு 18 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 2003 ஆம் ஆண்டு மே மாதம் பாஸ்ரா நகரில் நிவாரணப்பொருட்கள் வைக்கப்பட்டிருந்த முகாமிலிருந்து பொருடகளைக் கொள்ளையடித்தவர்களைப் பிடித்துக் கொடுமைப்படுத்தியது பற்றி அதிகாரிகளிடம் தெரிவிக்காமல் இருந்தார் என்றும், சிறைக்கைதி ஒருவரைத் தாக்க மற்றொரு வீரருக்குப் பணம் கொடுத்துத் தூண்டினார் என்றும் கென்யன் மீது குற்றம் சாட்டப்பட்டது.

மார்க்கூவே (வயது-25) என்ற வீரருக்கு இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. ஈராக்கியர் ஒருவரைப் பளுதூக்கிச் செல்லும் வாகனத்தின் மேலே கட்டி இரக்கமற்ற முறையில் வண்டியை வேகமாக ஓட்டிக் கொடுமைப்படுத்தினர். மற்றொரு ஈராக்கியரை நிர்வாணமாக்கி பாலியல் செயல்களில் ஈடுபடுத்தினார் என்பது இவர் மீதான குற்றச்சாட்டுக்கள். ஈராக்கியரைத் தாக்கி அவர் மீது ஏறி நின்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள டேரன் லார்ஜின் (வயது-30) என்பவருக்கு ஐந்து மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.



ஈரான் அணு உலை ஒன்றிற்கான எரிபொருளை வழங்கும் ஒப்பந்தமொன்றில் ரஷ்சியா நேற்றுக் கைச்சாத்திட்டுள்ளது. அமெரிக்காவின் எதிர்ப்பின் மத்தியிலும் கைச்தாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தம் மூலம் ஈரான் புஸ்கேர் துறைமுகத்துள்ள அணு உலை செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவ் அணு உலையை படத்தில் காணலாம்.

## ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் உறுப்பினர்களை அதிகரிக்க இந்தியா எதிர்ப்பு

(நியூயோர்க்)

ஐ.நா.பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர் அல்லாத பிரிவில் மட்டும் விரிவாக்கம் செய்யும் யோசனையை இந்தியா நிராகரித்துவிட்டது.

ஐ.நா.சபையில் சாதாரண முறையில் நடைபெற்ற விவாதத்தின்போது இந்தியத் தூதர் நிரூபம் சென் இதைத் தெரிவித்தார். ஐ.நா.வை சீரமைப்பது தொடர்பான உயர்நிலைக் குழுவின் அறிக்கை குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டது.

நிரூபம்சென் கூறியதாவது, ஐ.நா பாதுகாப்பு சபையில் வளரும் நாடுகளுக்கு நிரந்தர இடமளிக்கவேண்டும். சர்வதேச பொருளாதார நடைமுறைகளைக் கட்டுப்படுத்தவும் சீர்திருத்தங்களை ஊக்குவிக்கவும், பலவீனமான நாடுகளைப் பாதுகாக்கவும் வளரும் நாடுகளுக்கு நிரந்தர இடமளிப்பது அவசியம்.

வீட்டோ அதிகாரம் தராமல் நிரந்தர அந்தஸ்து மட்டுமே அளிப்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது. வீட்டோ (ரத்து) அந்தஸ்துள்ள நாடுகளுக்குச் சமமாக அந்த அந்தஸ்தில்லாத நாடுகளைக் கருதமுடியாது. வளரும் நாடுகளுக்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து அளித்து ஐ.நா.வை மறுசீரமைப்பது முக்கியம் என்றார்.



இந்தோனேசியாவில் சுனாமிப்பேரலையால் சேதமுற்ற பாலம் ஒன்றை புனரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இந்தோனேசிய இராணுவவீரர்கள்

## இந்திய விஞ்ஞானிக்கு அதியுயர் விருது

(பரிஸ்)

இந்திய விஞ்ஞானி சி.என். ஆர் ராவ் உட்பட ஆறு பேருக்கு டேன்டேவிட் பரிசு கிடைத்துள்ளது.

அறிவியல், தொழில்நுட்பம், கலாசார சமூகத்தில் சிறந்த முறையில் செயற்படுபவர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

சி.என். ராவ் உட்பட மூவர் ரூபா 45 இலட்சம் பரிசுத்தொகையைப் பகிர்ந்து கொள்கின்றனர். பெங்களூரில் உள்ள ஜவஹர்லால் நேரு மையத்தில் பணிபுரிகிறார் ராவ். மேலும் கலிபோர்னியப் பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பேராசிரியராகவும் உள்ளார்.

## அமைதிப்பரிசுக்கு 199 விண்ணப்பம்

(ஒஸ்லோ)

இந்த ஆண்டு நோபல் பரிசுக்காக 199 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுகின்றன.

அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் கொலின்பவல், சிதார் இசைக்கலைஞர் ரவி சங்கர் உள்ளிட்ட 163 பெயர்கள் பரிசீலனையில் உள்ளன. 36 நிறுவனங்களின் பெயர்களும் பரிசீலனைப் பட்டியலில் இருக்கின்றன.

## இஸ்ரேலில் வெடிகுண்டுத்தாக்குதல் சந்தேகத்தில் எட்டுப்பேர் கைது

இஸ்ரேல் நாட்டில் டெல் அவிவ் நகரில் உள்ள இரவு விடுதியில் தற்கொலைப் படைத் தீவிரவாதி வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தியதில் நான்கு பேர் பலியானார்கள். இந்த சம்பவம் தொடர்பாக இரு நாடுகளுக்கு மிடையேயான சமரச முயற்சியில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த வெடிகுண்டு சதித்திட்டம் தொடர்பாக எட்டுப்பேரை இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனப் படையினர் கைது செய்துள்ளனர். இவர்களில் இரண்டு பேர் தற்கொலை படைத் தீவிரவாதியின் சகோதரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### 47000 இணையத்தளங்களை சீன அரசு மூடியது

சீனாவில் கடந்த ஆண்டில் மட்டும் 47 ஆயிரம் இணையத்தளமையங்கள் மூடப்பட்டுள்ளன. முறையான உரிமம் பெறாமல் இவை இயங்கின. கணனிப்பயிற்சிப் பள்ளிகள் என்ற பெயரில் சில இணையத்தள மையங்கள் பொருத்தமற்ற நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டன. இதனாலேயே சீன அரசு மேற்படி நடவடிக்கையை எடுத்துள்ளது.

## 23மாடிக் கட்டடத்தில் தீ விபத்து நால்வர் உடல் கருகிப் பலி; 20 பேர் காயம்

தாய்வான் தாய்சங் நகர் மையப்பகுதியில் 23 மாடி பிரமாண்ட கோபுரம் உள்ளது. இந்த 23 மாடி கோபுரத்தின் உச்சியில் சுழலும் ஹோட்டல் உள்ளது. நேற்றுமுன்தினம் ஹோட்டலில் ஏராளமான மாணவர்கள் உணவருந்திக் கொண்டிருந்தனர்.

அப்போது அந்தக் கட்டடத்தில் திடீர் என்று தீப்பிடித்துக் கொண்டது. தீ மளமளவென்று மற்றப்பகுதிகளுக்கும் பரவியது. தீ விபத்து நடந்தபோது அந்தக் கட்டடத்தில் உள்ள ஒரு தளத்தில் உள்ள கல்வி மையத்தில் மாணவர்கள் பரீட்சை எழுதிக் கொண்டிருந்தனர் அந்த மாணவர்கள் தப்பிவிட்டனர்.

இந்தத் தீயில் நான்கு பேர் கருகி பலியாகிவிட்டனர், 20இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.



## உலகில் நவீனத்துவம் கொண்ட துறைமுகம் சீனாவில் ஆரம்பம்

உலகின் மிகப் பெரிய கொள்கலன் இறங்குதுறை சீனாவில் குயிங்டே துறைமுகத்தில் செயற்படத் தொடங்கியுள்ளது.

இத்துறைமுகத்தின் முதல் நான்கு பிரிவுகள் 2003ஆம் ஆண்டு செப்ரெம்பரில் செயற்படத் தொடங்கின. 5,6,7ஆவது பிரிவுகளைக் கட்டும் பணி 2004 இல் முடிவடைந்தது.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை ஐந்தாவது பிரிவுக்கு கப்பல் வந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. இப் புதிய பிரிவுகளால் இத் துறைமுகத்தால் ஒரே சமயத்தில் ஏழு கப்பல்களின் சரக்குகளைக் கையாள முடியும். மிக நவீனமானது இத்துறைமுகமாம்.

## அமெரிக்க புலனாய்வு அதிகாரி பல்கேரியாவில் சுட்டுக் கொலை

அமெரிக்காவைச் சேர்ந்த புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவர் பல்கேரியாவில் சிறுவர், சிறுமிகளை 'பாலியல்' தொழிலில் ஈடுபடுத்தும் கும்பல் பற்றி விசாரணை நடத்தி வந்தார்.

இந்த நிலையில் அந்த அமெரிக்கர் சோபியா நகரில் கொலை செய்யப்பட்டார். இங்குள்ள கிணற்றில் அவரது உடல் வீசப்பட்டது. இந்தக் கொலை தொடர்பாக .இரண்டு வாலிபர்களை பல்கேரிய பொலிசார் கைது செய்துள்ளனர்

# சந்திரிகாவின் அடுத்த நகர்வு?

**உப்புள் ஜோசப் பர்னாந்து (லங்காதீப)**
**தமிழில் வடிவேல்**

கடந்தவாரம் வெளியான சில கொழும்பு தினசரிகளில் உலகின் முக்கிய மூன்று சனாதிபதிகளின் உருவப்படங்கள் பிரசுரிக்கப்பட்டன. அவர்கள் முன்னாள் அமெரிக்க சனாதிபதி களான பில்கிளின்டன், ஜோர்ஜ்புஷ் மற்றும் தற்போது பதவியிலிருக்கும் சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோராவர். ஜோர்ஜ் புஷ், பில் கிளின்டன் ஆகிய இருவரும் சந்திரிகாவை மையப்படுத்தி அமர்ந்திருப்பதாகப் படம் காட்டியது.

"பயப்பட வேண்டாம் சனாதிபதி பதவி யில் இருந்து நான் ஓய்வுபெற்றாலும் உங்க ளைப்போன்று மதிப்பாக இருக்க முடிகிறது. அதிகாரம் மட்டுமே இல்லை. முன்னாள் சனாதிபதி என்ற பதவி இருக் கிறது" இவ்வாறு சந்திரிகாவிடம் பில்கிளின் டன் கூறியிருப்பாரா அல்லது "பயப்பட வேண்டாம் நானும் தேர்தலில் தோல்விகண்டவன் தான் எட்டு வருடமாக எதிர்க்கட்சியில் இருந்தேன். எனினும் அந்தக் காலப்பகுதியில் எனது மகனுக்கு அரசியல் அறிவை ஊட்டி வளர்த்தேன். அந்த எட்டு வருடங்களின் பின்னர் எனது மகன் வெற்றியைப் பெற்றுத்தந்திருக்கிறார்" என ஜோர்ஜ்புஷ் கூறியிருப்பாரா என்பதை அறிய முடியாவிட்டாலும் படத்தைப் பார்த்த தும் அவ்வாறே எண்ணத் தோன்றியது.

கிளின்டனைப் பார்த்து அவரைப் போன்ற நிலைக்கு வருவோமா அல்லது ஜோர்ஜ் புஷ்ஷைப் பார்த்து அவரின் நிலைக்கு வருவோமா என சந்திரிகா எண்ணத் தோன்றும். அவர் யாருடைய நிலைக்குள்ளாவார் என்பதை தற்போது கூறமுடியாது.


ஆனால் சந்திரிகா என்னசெய்யப் போகிறார் என்பதே தற்போது அனைவரும் விடைதேட வேண்டிய கேள்வியாகும். ஆயினும் இந்தக் கேள்விக்கு பலரும் பலவிதமான பதில்களைக் கூறலாம். ஜே.வி.பியை ஒதுக்கிவிட்டு, ஐ.தே.கட்சியுடன இணைந்து அரசாங்கம் ஒன்றை அமைக் கலாம் என்றும் ஜே.வி.பியை மட்டந்தட்டி விடுதலைப்புலிகளுடன் பேச்சை ஆரம்பிக் கலாம் என்றும் பாராளுமன்றைக் கலைத்து விடுவார் என்றும் பல விதமான விடைக ளைப் பலரும் உத்தேசிக்கலாம். ஆனால் சந்திரிகாவின் மூளையில் என்ன இருக்கி றது என்றால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி யையும் அதன் தலைவர்களையும் பாது காப்பது எப்படி என்ற சிந்தனையே.

அப்படியானால் பதவி? அரசியலமைப் பின்படி 2005ஆம் ஆண்டுவரை மட்டுமே பதவியில் இருக்கலாம். இல்லையேல் அதன் ஒரு பிரிவில் கூறப்படுவதை வைத்து 2006 வரை தொங்கிக்கொண்டிருக்கலாம். அப்படியா னால் ஆட்சியதிகாரம்? அதனை பாது காத்துக்கொள்ள அவரால் முடியாது. இருப் பினும் பிரதமராக பதவியேற்கும் உரிமை கிடைக்கலாம். அதுவும் அரசியல் அமைப் பில் மாற்றத்தைக்கொண்டு வராவிடில் 1994ஆம் ஆண்டு சிறிமாவுக்கு ஏற்பட்ட நிலையே உருவாகும். சிறிமா 1994ஆம் ஆண்டு முதல் 2000ஆம் ஆண்டுவரை கட்சியின் தலைவியாகவும் பிரதமராகவும் இருந்தாலும் முழு அதிகாரமும் சனாதிபதி சந்திரிகாவின் கையிலேயே இருந்தது. ஆனால் சிறிமாவும் அரசியலமைப்பை மாற்றி நிறைவேற்று சனாதிபதி முறையை நீக்கிவிட்டு பிரதமரின் அதிகாரத்தின் கீழ் அரசைக்கொண்டுவர நினைத்தாலும் அன்று சந்திரிகா இடம்கொடுக்கவில்லை.

நாளைக்கு சந்திரிகாவுக்கும் இந்த நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் சந்திரிகா தனது மகள் என்ற வகை யிலும் வயது முதிர்ந்து நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாத வகையிலும் விட்டுக்கொடுத் திருக்கலாம். ஆனால் அதே கட்சியில் வேறொரு நிறைவேற்றதிகார சனாதிபதி பதவி ஏற்றால் சந்திரிகா அவருக்குக் கீழான ஒரு பிரதமராகவே இருக்க வேண்டிவரும். ஆனால் அவர் செயலாற் றக்கூடிய வயதையுடைய வராக இருப்ப தால் அவ்வாறு இருக்கமாட்டார். இருக்க வேண்டியதுமில்லை. ஆகவே அவர் சனாதிபதியோடு முரண்பட்டு பிரதமர் பதவியை எறிந்துவிட்டு வீடுசெல்லவேண்டி யேற்படும்.

அதனாலேயே அவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையை பாதுகாக்க வேண்டி யுள்ளது. அதற்காக அவர் செய்யவேண் டியதாவது, தலைமைக்கு இருப்பது தானே என்பதை விளங்கிக்கொள்ளும்வகையில் காட்டிக்கொள்ளவேண்டும். அதற்கு எதிராக குரல்கொடுக்கும் இயக்கத்தை மௌன மாக்கவேண்டும்.

இப்போது அவரின் தலைமையின்றியே சிறிலங்கா சுதந்திரக்கட்சியை வெற்றிபெறச் செய்யும் (இயக்கமாக) சக்தியாக ஜே.வி.பி. விளங்குகிறது. கூட்டணியின் மூலம் அது எதிர்கால சனாதிபதிப் பதவியையும் தலைமையையும் குறிவைத்திருக்கிறது. "இப்போது பண்டாரநாயக்கர்களின் யுகமல்ல. எமக்குப் பின்னால் வாருங்கள் நாம் வெற்றிபெற்றுத் தருவோம்" என ஜே.வி.பி. கூறுகின்றது. அதேவேளை சந்திரிகா இவ்வாறு கூறுவதற்கும் தெரியா தவரல்ல. அதனாலேயே போகச்சொல் லாமல் விலகச்சொல்லிக் கூறுகிறார். அத்துடன் ஜே.வி.பி. வேறொரு தலை மையை உருவாக்கிவிடும் என்பதும் தெரியும். ஆகவே ஜே.வி.பியை விலக்கி விட்டால் இந்த அச்சுறுத்தலில் இருந்து சந்திரிகா தப்பிவிடுவார்.




அடுத்ததாக சந்திரிகாவுக்கு எதிரான சக்தியாக இருப்பது மகிந்தராஜபக்ஷ என்னும் சக்தியாகும். மகிந்த நேரடியான தெளிவான ஒரு எதிர்ப்புசக்தியாக விளங்கு கின்றார். ஆனால் ஜே.வி.பி.யை ஒதுக்கி விடுவது போல மகிந்தவை ஒதுக்குவது சுலபமானதல்ல. இவரைத் தவிர்த்துவிட்டு ரட்ணசிறிவிக்ரம நாயக்கவை சனாதிபதி வேட்பாளராக நியமித்தாலும் மகிந்தவுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது காரணம் ரட்ணசிறி தேர்தலில் தோல்வி கண்டாலும் கட்சித்தலைமையும் எதிர்க்கட்சி தலைவர் பதவியும் மகிந்தவுக்கு கிடைக்கும் கட்சி அதற்கு இடமளிக்கிறது. இதற்கு இன்னும் ஒரு காரணமாக மகிந்தவை சனாதிபதி வேட்பாளராக நியமிக்காததாலேயே கட்சி தோல்வியடைந்ததாக சந்திரிகா மீது வெறுப்புக் கொண்டு ஏனையோர் மகிந்தவை சூழ்ந்து கொள்வர்.

சிலவேளை தனக்கு இலாபம் தேடும் நோக்கில் ரட்ணசிறி வெற்றி பெற வேண் டும் என மகிந்த உணர்ந்து வெற்றிபெறச் செய்யவும் முயற்சிக்கலாம் அது நிறை வேறினால் ரட்ணசிறி சனாதிபதியாகவும் மகிந்த ராஜ பிரதமராகவும் வரலாம்.

1982 ஆம் ஆண்டிலும் சிறிமாவின் காலத்தில் ஹெக்டர் கொப்பேகடுவ, மைத்திரிபால சேனநாயக்கா இருவருக்கு மிடையிலும் பேரம் பேசுதல் நடந்தன. மிகவும் பொருத்தமானவராக இருந்த மைத்திரியை ஒதுக்கிவிட்டு ஹெக்டர் கொப்பேகடுவவுக்கு சிறிமா சனாதிபதி வேட்பாளராக முன் னுரிமையளித்தமை தனது எதிர்கால பிரதம மந்திரி பதவிக் கனவை நிறை வேற்றும் நோக்கத் திலேயே. இதனால் மைத்திரிபாலவுடன் முறுகல் ஏற்பட்டு அவர் கட்சியை விட்டுவிலகும் நிலைக்குத் தள்ளப்பட்டார் (விலகவில்லை).

எனினும் கொப்பே கடுவ சனாதிபதி வேட்பாளராக அனுமதித்ததும் அரை மனதுடனேயே. அதேபோல் அவர் வேட்பா ளராக அறிவிக்கப்பட்டதும் கட்சியினர் அவரை சுற்றி வட்டமிட ஆரம்பித்தனர். அதனால் சிறிமா இதனை சகிக்காமல் அவருக்கு பல இடையூறுகளை விளைவித் தார். கொப்பே கடுவ சிறிமாவுக்கு எதிரான குழுக்களை ஒன்றிணைக்க ஆரம்பித்தார். அதில் ஒன்று கம்யூனிஸ்ட் கட்சியும் அதனையடுத்து சிறிமாவின் தலைமையை குறிவைத்து மைத்திரிபாலவின் குழுவும் அவருடன் இணைந்தது.

இது போல நாளைக்கு மகிந்தவும் ரட்ணசிறியும் இணைந்தாலும் வி[illegible] பில்லை. ரட்ணசிறி சனாதிபதி வேட்பாள[illegible] கும் போது சந்திரிகா அரசியல் அநாதை யாகிவிடுவார் அதனைத் தடுக்க வேண்டு மாயின் சந்திரிகா மகிந்தவை சனாதிபதி வேட்பாளராக அறிவிக்க வேண்டும். அவ்வாறு செய்வராயின் பின்னர் அவரை பதவியிலிருந்து நீக்கலாம். ஆனால் மகிந்த தோல்வி கண்டால் இருவரும் வீட்டுக்குச் செல்லலாம். சில வேளை தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்றுக்கு சந்திரிகா வந்தால் தோல்வி கண்ட மகிந்தவை தூக்கி எறிந்து விட்டால் சனாதிபதி உள்ளேயிருப்பார். மகிந்த வெளியேறுவார். இதில் எது நிகழ்ந் தாலும் 1982 ஆம் ஆண்டு சிறிமாவுக்கு நிகழ்ந்ததே சந்திரிகாவுக்கும் நிகழும். இவ்வாறான நிலைமைகளில் சந்திரிகாவின் அடுத்த நகர்வு என்ன என்பது சந்திரி காவுக்கே புரியும்.

# மலையகத் தமிழர்களின் பின்னடைவுகளுக்கு பிரிட்டன், இந்தியாவே முக்கிய காரணம்


## - மலையக மக்கள் முன்னணி செயலாளர் கண்டனம்

மலையகத் தமிழர்களின் மிக மோசமான அரசியல் சமூகப் பின்னடைவுகளுக்குத் தீர்வு காண்பதற்காக இந்திய அரசையும், பிரித்தானிய அரசையும் ஒரு பேச்சு வார்த்தை மேசைக்கு அழைக்க வேண்டும். இந்த மக்களின் தாழ்ந்து போன வாழ்வுக்கு இந்த இரண்டு நாடுகளுமே காரணி களாகும் என ம.ம.மு தெரிவித்துள்ளது. இம்மக்களின் சமூக மேம்பாட்டின் நிமிர்த்தம் இந்த இரு நாடுகளுக் கிடையிலான ஒரு சந் திப்பை ஏற்படுத்துவதற்கு சர்வதேச ரீதியில் இலங்கைத் தமிழர்களின் விடுதலைக்காக குரல் கொடுத்து வரும் ம.தி.மு.க. தலைவர் வை.கோ., தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், விடுதலைச் சிறுத்தைத் தலைவர் தொல். திருமாவளவன் போன்ற தொலைநோக்கு அரசியல் சிந்தனை மிக்க தலைவர்களின் ஆதரவை ம.ம.மு. எதிர்பார்க்கின்றது என தமிழக பயணத் தின்போது மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் முருகன் சிவலிங்கம் தனித்தனியாக இம்மூன்று தலைவர்களைச் சந்தித்து உரையாடியபோது கேட்டுக் கொண்டார். இந்த உரையாடலின்போது, சட்ட மன்றத்தில் பலமுறை இலங்கை மலையகத் தமிழர் சம்பந்தமாகப் பேசியுள்ளதாக கூறிய வை.கோ., ஹன்சாட் குறிப்பு களையும் எடுத்துக் காட்டியுள்ளார். இலங்கை வட,கிழக்கு தலைமைகளைப் போல் மலையகத் தலைவர்கள் தங்கள் மக்களின் அரசியல், சமூக பிரச்சினைகளை, தமிழக அரசியல்வாதிகள் மத்தியில் வெளிக்கொணர்ந்ததில்லை. மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரன் ஒருவரே எங்களிடம் மலையகத் தமிழர் பற்றி நிறையத் தகவல்களைத் தந்துள்ளார் என்றார்.இச் சந்திப்பின்போது, சிவலிங்கம் மேலும் பல தகவல்களை வழங்கியுள்ளார். அரசியல் உரிமைகளுக்கு முன்பதாக அடிப்படை மனித உரிமைகள் அத்தனையும் மறுக்கப்பட்டவர்களாக, ஐ.நா. மனித உரிமை சாசனத்துக்கு முற்றிலும் முரணான விதத்தில் உதாசீனப் படுத்தப்பட்ட மக்களாக, மலையகத் தமிழர்கள் இலங்கையின் ஏனைய சமூகத்தை விட தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். 200 ஆண்டுகள் வாழ்ந்தும், நிலமும், வீடும் அற்றவர்களாக கல்வியில் வளர்ச்சியடைய முடியாமல் விஞ்ஞானம், மருத்துவம், சட்டம், கலை போன்ற கல்வித்துறையில் உயர்கல்வி யைத் தொடர முடியாமல், கல்வி அமைச்சின் வளங்களும், வேலைத்திட்டங்களும் திட்டமிட்டவாறே மறுக்கப்பட்டு வருகின்றன. இலங்கை சனத்தொகையில் அதிக இறப்பு வீதத்தை கொண்டவர்கள் மலையகத் தமிழர்களே ஆவர். சிசு மரணங்களிலும், பிரசவ காலங்களிலும், தாய்மார் மரணங்களிலும் அதிக இறப்பு வீதத்தைக் கொண்டவர்கள் இதே மக்களாவர். இலங்கையில் அதிக உழைப்பை வழங்கி மிக மிக அற்ப சம்பளத்தை, இவர்கள் பெறுவதினால் வறுமையின் காரணமாக போசாக்கற்ற குடிமக்களாக துன்பப்பட்டு வாழ்கின்றனர். ஒவ்வொரு அரசாங்கமும் இந்த மக்களை தேயிலை, இறப்பர் பெருந்தோட்ட கூலிகளாகவே ஓரங்கட்டிவருகின் றன.பெருந்தோட்டங்களில் தொழிற்சாலைகளை அறிமுகப்படுத்தி இந்த சமூகத்தில் ஒரு புதிய பரம் பரையை, ஒரு புதிய சமூகச் சூழலை உருவாக்குவதற்கு இனவாத அரசுகள் விரும்புவதில்லை. இந்த அரசியல் வஞ்சனையால் மலையகத் தமிழர்கள் பரம்பரை பரம்பரையாக பெருந்தோட்டத் தொழிலை தங்கள் பாரம்பரியத் தொழிலாக ஏற்று உழைப்பதற்கு நிர்ப் பந்திக்கப்பட்டுள்ளார்கள். இந்த நிலைமைகளுக்கெல்லாம் இந்தியத் தமிழர்களை பெருந்தோட்டக் கூலிகளாக பிரிட்டிஷ்' வியாபாரிகளுக்கு தாரை வார்த்துக் கொடுத்த இந்திய அரசும், இந்த மக்களை ஒப்பந்தக் கூலி களாக ஒன்றரை நூற்றாண்டு காலமாக கொடுமைப்படுத்தி இலங்கையின் தேசியமயக் கொள்கைக்குப் பின்னர் அநாதரவாக விட்டு விட்டு சொந்த நாட்டுக்கு ஓடிப்போய்விட்ட பிரிட்டிஷ் அரசும் பொறுப்பேற்க வேண்டும் என்றார்.

**17.**

➡ இந்தோனேஷியாவைச் சேர்ந்த 2 பத்திரிகையாளர்கள் ஈராக்கியத் தீவிர வாதிகளால் கைது.

➡ ஈராக் நாட்டின் தலைநகர் பாக்தாத்தில்-ஷியாமுஸ்லிம்களுக்கான மசூதியில் இடம் பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 19 பேர் பலி;23 பேர் காயம்.



➡ பாகிஷ்தானின் தென்பகுதி மாகாணத்தில் பொலிசார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது 27 சுனி முஸ்லிம் கிளர்ச்சிவாதிகள் பொலிசாரால் கைது.

➡ ஹொங்கொங்கின் அருகிலுள்ள கடலில் சீனச் சரக்குக்கப்பல் ஒன்றும், படகொன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் படகிலிருந்த 98 பேர் படுகாயமடைந்தனர்.

➡ தாய்லாந்து நாட்டின் தெற்கில் உள்ள சுன்னகை கொலக் மாநிலத்தின் நராகிவிட் நகர்ப் பகுதியிலுள்ள உல்லாசப் பயணிகள் ஹோட்டல் ஒன்றில் சக்தி வாய்ந்த குண்டொன்று வெடித்ததில் ஐந்து பேர் பலி; 40 பேர் படுகாயம்.

➡ ரஷ்யாவின் டாகெஸ்தான் பிராந்திய அலுவலகத்தின் முன்னால் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் மூவர் மரணம்; ஐவர் காயம்.

**18.**

➡ மன்னர் ஆட்சியை எதிர்த்து நேபாளத்தில் ஆர்ப்பாட்டம் செய்த எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது.

**19.**

➡ நேபாளத் தலைநகர் காத்மண்டின் தென்கிழக்கே 300 கிலோமீற்றர் தொலைவிலுள்ள மகேந்திரா நகரில் மாவோயிஸ்ட்டுகள் போலியாக திருமண ஊர்வலம் ஏற்பாடு செய்து , பொலிசார் மீது தாக்குதல் நடத்தியதில் ஒரு பொலிஸ் அதிகாரி உயிரிழந்ததுடன், 5 பேர் காயமடைந்தனர்.

➡ நேபாளத்தின் தலைநகர் காத் மண்டுவில் அரச படையினருக்கும், மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் 40 மாவோயிஸ்ட் தீவிர வாதிகள் பலி.

➡ இந்தியாவின் சேலத்தில் பனிக் கட்டித் தொழிற்சாலையில் அமோனிய வாயுக்கொள்கலன் வெடித்ததில் 3 பேர் பலி.

➡ அமெரிக்காவின் முன்னாள் சனாதி



பதிகளான பில்கிளின்டன், ஜோர்ஜ் புஷ் ஆகிய இருவரும் ஐரோப் பிய நாடுகளுக்கு விஜயம்.



➡ இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தாவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள பண்டங்சேரிப் பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் 146 பேர் பலி ; வீடுகள் பலவும் புதையுண்டன.



➡ ஈராக் தலைநகர் உட்பட எட்டு இடங்களில் இடம் பெற்ற குண்டுத்தாக்குதல்களில் 55 பேர் பலி ; பலர் காயம்.

**20.**


➡ ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் வடக்குப்பகுதி மற்றும் அல்-அன்பர் ஆகிய இடங்களில் இடம்பெற்ற இருவேறு குண்டு வெடிப்பில் அமெரிக்கப்படை வீரர் உட்பட 10 பேர் பலி.

➡ காஸாப் பகுதியில் குடியிருக்கும்



இஸ்ரேலிய மக்களை வெளியேற்று வ[illegible] இஸ்ரேலிய பிரதமரின் தி[illegible] அந்நாட்டு அமைச்சரவை அங்கீகாரம்.

➡ நேபாளத்தில் அரசுக்கு எதிராக



மாவோயிஸ்ட்டுத் தீவிரவாதிகள் ஜோதிமாரா என்ற இடத்தில் வீதியில் சென்ற 14 பாரவூர்திகளைத் தீ வைத் தெரித்தனர்.

➡ பங்களாதேஷின் தலைநகர் அருகேயுள்ள பூரிகங்கா நதியில் திடீரென்று வீசிய புயல் காரணமாக நதியில் பயணித்துக் கொண்டிருந்த படகுகள் இரண்டு ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் 200 பேர் பயணித்த படகு நீரினுள் மூழ்கியதில் 82 பேர் பலி, 100 பேர் காணாமல் போயினர்.



## கடந்த வாரத்தில்

**17.02.2005-23.02.2005**

➡ போர்த்துக்கலில் 230 ஆசனங்களைக்கொண்ட பாராளுமன்றத் திற்கான பொதுத்தேர்தல் இடம்பெற்றது.

➡ சீனாவின் தெற்குப்பிராந்தியமான ஸிங்ஜியாங்கில் உள்ள ஷான்ஷான் மாவட்டத்திலுள்ள ஒரு வியாபாரக் கட்டடத் தொகுதியின் மூன்றாம் மாடியிலிருந்த பனிச்சறுக்குத் திடலினுள் நுளைந்த நபர் ஒருவர் அங்கிருந்தவர்களைக் குத்தியதில் 6 பேர் பலி, 8 பேர் காயம். குறித்தநபர் மேற்படி கொலைச்செயலைப்புரிந்து பின்னர் கட்டடத்திலிருந்து வெளியே குதித்து தற்கொலை செய்துகொண்டார்.

➡ ஹெயிட்டியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தில் 15 பேர் கொல்லப்பட்டனர்; பலர் காயம்.

➡ நேபாள கமிவாஸ்து மாவட்டத்தில் மாவோ தீவிரவாதிகளுக்கும், பொது மக்களுக்குமிடையில் கடும்மோதல்கள் ஏற்பட்டன. இதில் 12 தீவிரவாதிகள் பலி.

**21.**

➡ ஈராக்கிய தொலைக்காட்சியின் செய்தியாளரான றயீடாவாசனும் அவரது 10 வயது மகனும் கிளர்ச்சிவாதிகளினால் மொசூல் நகரில் வைத்து கடத்தப்பட்டனர்.

➡ முற்றிலும் இந்தியாவிலேயே வடிவமைக்கப் பட்ட மத்தியதர "ஆகாஷ்" ஏவுகணை ஒரிசாமாநிலம் பாலாசூர் அருகே இருக்கும் சந்திப்பூர் ஏவுகணைத் தளத்திலிருந்து விண்ணில் செலுத்தி பரிசோதிக்கப்பட்டது.

➡ இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவின் தென்கிழக்குப்பகுதியில் இருந்து 200 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பாண்டங் ஜகார்த்தாவில் பயங்கரப்புயல் மழை பெய்தமையினால் ஏற்பட்ட நிலச்சரிவில் 150 இற்கும் மேற்பட்டோர் பலி.

➡ பலஸ்தீனக் கைதிகள் 500 பேரை இஸ்ரேல் விடுதலை செய்தது.

➡ நேபாளத்தில் ஜோதிமாரா என்ற



இடத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 5 பேர் பலி.

**22.**

➡ ஈரானின் தென்கிழக்குப்பகுதியில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியினால் தெஹ்ரானில் இருந்து 440 மைல் தொலைவிலுள்ள சராண்ட பகுதியிலுள்ள ஆறு கிராமங்கள் பாதிக்கப் பட்டுள்ளதுடன் 500 பேர் பலி, பலநூறு வீடுகள் தரைமட்டம்.

➡ சிரியாவை வெளியேற்றக்கோரி லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் எதிர்ப்பு



ஆர்ப்பாட்டம்.

➡ காஷ்மீரில் 30 ஆண்டுகளுக்குப் பின்பு கடுமையான பனிப்பொழிவில்




சிக்கி 300 பேர் பலி, 200 பேர் காணாமல் போயுள்ளனர், 200 இற்கும் மேற்பட்ட வீடுகள் உடைந்து பனியில் மூழ்கின.

➡ இந்தோனேஷியாவின் வடக்குக் கரையில் உள்ள சார்மி நகரவிமான நிலையத்தில் இருந்து 18 பயணிகளுடன்



புறப்பட்ட விமானம் பட்டிலா மாவட்டத்தின் கடலில் வீழ்ந்து நொருங்கியதில் 16 பேர் பலி.

**23.**

➡ கிழக்கு சீனாவின் அன்குப் எனுமிடத் திலிருந்து 51 பேருடன் புறப்பட்ட பஸ் ஒன்றுக்குள் குண்டு வெடித்ததில் 17 பேர் பலி, பலர் காயம்.

➡ ஆப்கானிஸ்தானின் பல இடங்களில் கடுங்குளிர்காரணமாக ஏற்பட்ட நோய் களினால் 150 இற்கும் மேற்பட்டோர் பலி.

➡ பீகார்-ஜார்க்கண்ட் மாநில சட்ட சபைத்தேர்தலில் இறுதிக்கட்ட வாக்களிப்பின் போது இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களினால் 5 பேர் பலி.



➡ இந்தியாவைச் சேர்ந்த ஷாஜகான் என்னும் நபர் பீல் சவுதி அரேபிய நாட்டுக்குள் ஹெரோயின் போதைப் பொருள் கடத்தியதாக குற்றஞ் சாட்டப்பட்டு . மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

# தேசிய நடவடிக்கை செயலகத்தால் சுனாமி குறித்து திரட்டப்பட்ட தகவல்களைக் காணவில்லையாம்

## - நிவாரண நடவடிக்கைகள் தாமதமாகும்

சுனாமியின் பின்னர் ஒரு மாதகாலமாக தேசிய நடவடிக்கை செயலகத்தால் திரட்டப்பட்ட தகவல்கள் காணாமல் போயிருப்பதாக ஆங்கில ஊடகம் ஒன்று நேற்று முன்தினம் தகவல் வெளியிட்டுள்ளது.

இதன் காரணமாகவே புனரமைப்புப்பணிகளை உரிய முறையில் மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

சுனாமியால் இறந்தவர்கள், காணாமல் போனவர்கள் மற்றும் சர்வதேச நிதியுதவிகள் தொடர்பான விபரங்களே காணாமல்போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானங்கள் மூலமாகவும், கப்பல் மூலமாகவும் எடுத்து வரப்பட்டுள்ள மீள் கட்டுமான பொருட்கள் உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படாமல் தேங்கி இருப்பதற்கு இவை அனுப்பி வைக்கப்பட வேண்டிய இடங்கள் குறித்த விபரங்கள் காணாமல் போனமையே காரணம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும், தற்போது மீண்டும் இந்தத் தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (32)

## வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து தன்னை வெளியேற்றுவது தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற செய்தியை வெளியிட்டதன் மூலம் உயர்நீதிமன்றம் அவமதிக்கப்பட்டுள்ளதென்று அமைச்சர் ரோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

இந்தச் செய்தியை வெளியிட்டதன் மூலம் லங்காதீப பத்திரிகை உயர் நீதிமன்றத்தை அவமதித்ததென்று கூறி, அதன் ஆசிரியர் மீது வழக்குத்தாக்கல் செய்துள்ளார்.


# விசேட விலைக்கழிவு

எமது நிறுவனத்தில் ஒரே தடவையில்

பெருமளவு புகைப்படச் சுருள்களை

பிரதி ஆக்கம் செய்வோருக்கு



~~4R-12.50~~ 4R-8.75

மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்

யாழ்வீதி, மானிப்பாய்.

T.P: Fax:-021-222-2884

(சி-11512)


# கரைதுறைப்பற்று ப.நோ.கூ. சங்கத்தின்

## வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம்

05.03.2005

கரைதுறைப்பற்று ப.நோ.கூ. சங்கத்தின் வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம் 26.12.2004 ஆம் திகதி நடைபெறவிருந்தும் சுனாமிக் கடல் அனர்த்தம் காரணமாக குறிப்பிட்ட கூட்டம் நடைபெறவில்லை. இக்கூட்டம் எதிர்வரும் 05.03.2005ஆம் திகதி காலை 10.00 மணிக்கு சங்கத் தலைவர் திரு. தி.சிவபாதம் அவர்களின் தலைமையில் முல்லைத்தீவு சங்க தலைமைக் காரியாலய மேல்மாடியில் நடைபெறவிருப்பதனால் அன்றைய தினம் சங்கத் தின் பொதுச்சபை உறுப்பினர் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பு:- ஏற்கனவே தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அமைய கூட்டம் நடைபெறுமெனத் தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

(சி-11517) செயலாளர்.

# அறிவித்தல்

அகில இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தையும், அரசினர் தமிழர் ஆசிரிய சங்கத்தையும் இணைத்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தை உருவாக்குவதற்கு முன்னணியில் நின்றுழைத்த நாட்டுப்பற்றாளர் ஏரம்பு ஆசிரியர் அவர்களின் திடீர் மறைவைக் கேட்டு தமிழர் ஆசிரியர் சமூகம் கவலை அடைகின்றது. அவரின் குடும்பத்தினரின் கவலையில் சங்கம் பங்கு கொள்கிறது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றது.

த.மகாசிவம்
பொதுச் செயலாளர்,
தமிழர் ஆசிரியர் சங்கம்.

(சி-11518)

# கேள்வி அறிவித்தல்

## விடுதி திருத்தி அமைப்பதற்கான கேள்வி கோரல்

## பிரதேச செயலக விடுதி – கண்டாவளை

மேற்குறித்த வேலைக்கான கேள்வி விண்ணப்பங்கள் கிளி/ மாவட்ட செயலக கேள்விச் சபையால் கோரப்படுகின்றன. இக் கேள்விக்கு பெறுமதி சேர் வரியில் தங்கள் பெயரைப் பதிவு செய்து (VAT) இலக்கத்தினைப் பெற்றுக்கொண்டதும். இலங்கை தேசிய நிர்மாணிகள் ஒப்பந்தக்காரர் சங்கத்தில் உறுப்பினருமாகிய தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களும்/ நிறுவனங்களும்/ சங்கங்களும் மட்டுமே கேள்வி கோர முடியும்.

இது சம்பந்தமான விபரங்களை அலுவலக நேரத்தில் செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

கேள்விப் பத்திரங்கள் 11. 03. 2005 நண்பகல் 12 மணி வரை கிளி/மாவட்ட செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவு நாள் 14. 03. 2005 காலை 10. 00 மணிவரை

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபரும்,
கிளி/மாவட்ட கேள்விச் சபைத்தலைவரும்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-11363)

# அறிவித்தல்

## அடையாள அட்டை வழங்குவதற்கான இடம் பெயர் சேவை

சுனாமிப்பேரலைத் தாக்கத்தின் போது அடையாள அட்டைகளை இழந்தவர்களிற்கு உரிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கான இடம்பெயர் சேவை 2005 மார்ச் மாதம் 5ஆம், 6ஆம் திகதிகளில் புதுக்குடியிருப்பு, முள்ளியவளை ஆகிய இரு இடங்களிலும் சமகாலத்தில் நடைபெறும். சுனாமியால் பாதிக்கப்பட்ட 18 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களும் தமக்குரிய சேவையை அந்தத் தினங்களில் எந்த இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம் என்ற விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| இல | கிராமசேவகர் பிரிவின் பெயர் | சேவையைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இடமும்,திகதியும் | |
|---|---|---|---|
| | | முள்ளியவளை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை | புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் அலுவலகம். |
| 01. | கள்ளப்பாடு M/91 | 5 ஆம் திகதி சனி | 6ஆம் திகதி ஞாயிறு |
| 02 | கோவில் குடியிருப்பு M/95 | 5 ஆம் திகதி சனி | 6ஆம் திகதி ஞாயிறு |
| 03 | செல்வபுரம் M/94 | 5 ஆம் திகதி சனி | 6ஆம் திகதி ஞாயிறு |
| 04 | முல்லைப்பட்டிணம் M/97 | 5 ஆம் திகதி சனி | 6ஆம் திகதி ஞாயிறு |
| 05 | செம்மலை கிழக்கு M/83 | 5 ஆம் திகதி சனி | 6ஆம் திகதி ஞாயிறு |
| 06 | உப்புமாவெளி M/85 | 5 ஆம் திகதி சனி | 6ஆம் திகதி ஞாயிறு |
| 07 | அளம்பில் தெற்கு M/87 | 5 ஆம் திகதி சனி | 6ஆம் திகதி ஞாயிறு |
| 08 | சிலாவத்தை தெற்கு M/89 | 5 ஆம் திகதி சனி | 6ஆம் திகதி ஞாயிறு |
| 09 | அளம்பில் வடக்கு M/86 | 5 ஆம் திகதி சனி | 6ஆம் திகதி ஞாயிறு |
| 10 | வண்ணாங்குளம் M/92 | 6 ஆம் திகதி ஞாயிறு | 5 ஆம் திகதி சனி |
| 11 | மணற்குடியிருப்பு M/96 | 6 ஆம் திகதி ஞாயிறு | 5 ஆம் திகதி சனி |
| 12 | செம்மலை M/84 | 6 ஆம் திகதி ஞாயிறு | 5 ஆம் திகதி சனி |
| 13 | சிலாவத்தை M/88 | 6 ஆம் திகதி ஞாயிறு | 5 ஆம் திகதி சனி |
| 14 | கள்ளப்பாடு தெற்கு M/90 | 6 ஆம் திகதி ஞாயிறு | 5 ஆம் திகதி சனி |
| 15 | முள்ளிவாய்க்கால் மேற்குM/99 | 6 ஆம் திகதி ஞாயிறு | 5 ஆம் திகதி சனி |
| 16 | முள்ளிவாய்க்கால் கிழக்குM/98 | 6 ஆம் திகதி ஞாயிறு | 5 ஆம் திகதி சனி |
| 17 | முல்லைத்தீவு தெற்கு M/93 | 6 ஆம் திகதி ஞாயிறு | 5 ஆம் திகதி சனி |
| 18 | அம்பலவன் பொக்கணை M/100 | 6 ஆம் திகதி ஞாயிறு | 5 ஆம் திகதி சனி |

சுனாமியினால் பாதிப்பு அடையாதவர்களும் தமது அடையாள அட்டை தொலைத்திருந்தால் அல்லது புதிதாகப் பெறவோ புதுப்பிக்கவோ இருந்தால் இந்த இடம் பெயர் சேவையின்போது சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.

இமெல்டா சுகுமார்,
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி-11514)

# கணுக்கேணிக்குளம், பனங்காமம்குளம் கமக்காரர்கட்கான

# அறிவித்தல்

முல்லைத்தீவுக் கச்சேரியில் 22-02.2005 நடந்த மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் கணுக்கேணிக்குளம் CAARP திட்டத்தின்கீழ் உடனடியாக புனரமைக்கப்பட உள்ளதாலும், பனங்காமம்குளம் NEIAP திட்டத்தின்கீழ் முன்னெடுக்கப்படும் மிகுதி வேலைகள் உடனடியாக முடிக்க வேண்டியுள்ளதாலும், பெரும்போக வேளாண்மை அறுவடை முடிந்தவுடன், துருசுகள் திறக்கப்பட்டு குளம் வெறுமையாக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

எனவே இவ்விரு நீர்ப்பாசனத்திட்டங்களின் கீழுள்ள கமக்காரர்கள் அனைவரும் இம்முறைசிறுபோகம் செய்யாது முறையே நீர்ப்பாசனப் பொறியியலாளர் முத்தையன்கட்டு, நீர்ப்பாசனப் பொறியியலாளர் வவுனிக்குளம், பிரிவினரால் நடைமுறைப்படுத்தப்படும் இவ்விரு வேலைகளையும் உரியமுறையில் நடைமுறைப்படுத்த உதவும் வண்ணம் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

எந்திரி. எஸ்.எஸ். சிவகுமார்,
பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளரும்,
பிரதி திட்டப்பணிப்பாளர், NEIAP
முல்லை மாவட்டம்.

(சி-11355)

# டுபாயில் மரணதண்டனையில் இருந்து உயிர் தப்பிய இந்தியர்

(புதுடில்லி)

போதைமருந்து கடத்தியதாக டுபாய் நீதிமன்றால் மரணதண் டனை விதிக்கப்பட்ட இந்தியர் நிரபராதி எனக் கண்டறியப்பட்டுள்ளார். இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது ;

முகமது ஷாஜகான் என்ற கேரளாவைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டு நருக்கு திடீரெனக் கிடைத்த நட்பு அவரை டுபாய்க்குக் கொண்டு செல்லும் அளவிற்கு வளர்ந்தது.நண்பரின் பண உதவியுடன் மகிழ்ச்சியுடன் டுபாய் புறப்பட்டார்.

ஆனால் அவருக்கு அந்தத் தருணத்தில் தனது பயணத்தின் விபரீதம் விளங்கவில்லை. டுபாயில் விமானம் இறங்கியதும் அங்கு சோதனையிட்ட டுபாய் அதிகாரிகளின் கண்களில் இவரது உடுப்புப் பொதியில் இருந்து 550 கிராம் போதைப் பொருள் கண்டு பிடிக்கப்பட்டிருக் கிறது. அதைக் கண்ட அதிகாரிகள் டுபாய் மொழியில் ஏதேதோ கேட்க இவரும் ஆமா போட்டிருக்கிறார். இறுதியில் இவருக்கு டுபாய் நீதிமன்றம் போதைப் பொருள் கடத்திய குற்றத்திற்காக மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

தனது நண்பன் பிரியமாகத் தந்தனுப்பிய உடுப்புப் பொதியின் இரகசியம் முகமது ஷாஜகானுக்கு இப்போதுதான் விளங்கியது. தான் ஒரு போதைப்பொருள் கும்பலால் பயன்படுத்தப்பட்டதை உணர்ந்த வர். உடனடியாகவே இந்திய தூத ரகத்தை அணுகித் தனது பக்க நியாயத்தைக் கூறியதால் இந்தியத் தூதரகம் எடுத்த நடவடிக்கை காரணமாக உயிர்தப்பியுள்ளார்.

## கண்ணீர் அஞ்சலி




நாட்டுப்பற்றாளர்
வே.க. ஏரம்பு

அவர்களின் மறைவினால் ஆழ்ந்த துயரடைகறோம். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிப்பதுடன், அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு யாழ்ப்பாண மாட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதல்களையும் தெரிவித்துக் கொள்கின் றோம்.

செயலாளர்
தேசிய எழுச்சிப் பேரவை
யாழ். மாவட்டம்.

(5367)



இந்தியத் தயாரிப்பான ஆகாஷ் ஏவுகணை ஆறாவது தடவையாக நேற்று முன்தினம் பரிசோதிக்கப்பட்டது.

# மூன்றாவது மொழிப்போர் தொடங்குவது அவசியம்

### டாக்டர் ராமதாஸ்

மூன்றாவது மொழிப்போர் தொடங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக திருச்சியில் மாநாடு நடத்தி அறி விப்பு வெளியிடப்படும் என்று பா.ம.க நிறுவனர் டாக்டர் ராமதாஸ் கூறினார்.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற கட்சியின் தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் அவர் பேசியபோது, தாய்மொழியைக் காப்பாற்றும நோக்கத்தில் தமிழ் பாதுகாப்பு இயக்கம் தோற்றுவிக்கப்பட் டுள்ளது. மூன்றாவது மொழிப் போர் தொடங்க வேண்டிய நிர்ப்பந் தத்தில் இருக்கிறோம். இது தொடர்பாக ஆலோசனை நடத்த திருச்சியில் மாநாடு நடத்தப் படும் அப்போது உரிய அறிவிப்பு வெளி யிடப்படும் என்றார்.

## சாவு அறிவித்தல்



இரத்தினம் கனகம்மா

கறுக்காய்த்தீவு பூநகரியினை சொந்த முகவரியாகக் கொண்டவரும் அன்புச் சோலை மூதாளர் பேணலகத்தின் வெளிப் பராமரிப்பில் உள்ளவருமான மாவீரர் லெப்டினன்ட் குமா அவர் களின் தாயாரான இரத்தினம் கனகம்மா அவர்கள் 27-02-2005 (நேற்று) ஞாயிற்றுக்கிழமை சாவடைந்து விட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-02-2005 (இன்று) காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கறுக்காய்த்தீவு இந்து மயானத்தில் தகனக்கிரியை செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள, நண்பர்கள், போராளிகள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

தகவல்:-
அன்புச் சோலை மூதாளர்,
பேணலகம்,
கனகபுரம்,
கிளிநொச்சி.

(சி.11367)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று- கிளிநொச்சி

வ.இல:- 168/04,
தன்மை:- மணநீக்கம்

வழக்காளி.
விபுலானந்தன் லதாஞ்சலி,
கால் ஏக்கர், உமையாள்புரம்,
பரந்தன்.

எதிர்

குணரத்தினம் விபுலானந்தன்,
நாகதம்பிரான் கோவில்,
கட்சன் வீதி, வட்டக்கச்சி,
கிளிநொச்சி.

-எதிராளி.

## பகிரங்க அறிவித்தல்

மேற்குறித்த எதிராளிக்கு,

மேற்படி வழக்கில், உமக்கு எதிராக, வழங்காளியின் தத்துவகாரரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், உமக்கு, முறைநிறை வேற்றுனர் மூலம், அழைப்புக் கட்டளை சேர்ப்பிக்க முயன்ற பொழுது, நீர் குறித்த முகவரியில் இல்லை என்று, முறைநிறைவேற்றுனரின் அறிக்கையைத் தொடர்ந்து, இப்பகிரங்க அறிவித்தல் உங்களுக்கு எதிராக விடப்படுகின்றது. இப்பகிரங்க அறிவித்தல் வெளியாகி 15 நாட்களுக்கிடையில் நீரோ, அல்லது உமது சார்பில் அக்கறையுடயவர்களோ, மன்றில் தோன்றி, சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆவன செய்ய வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில், உமக்கு எதிராக ஒரு முக விளக்கம் நடாத்தி, தொடர் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இதனால் வெளிப்படுத்தி, இப்பகிரங்க அறிவித்தல் விடப்படுகின்றது.

இந்த 2005 ஆம் ஆண்டு 02ஆம் மாதம் 21 ஆம் திகதி,
"மன்றின் கட்டளைப்படி"

வரைபு:
திரு.தா.இ. குலசங்கர்,
வழக்காளி சட்டவாளர்,
இரத்தினபுரம் வீதி.
கிளிநொச்சி.

கு. மாணிக்கராசா
பதிவாளர்
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
கிளிநொச்சி.

(சி-11352)

## கிளி/தொழில்நுட்பக்கல்வி நிறுவனம்-கிளிநொச்சி மாவட்டம்

### பதவி வெற்றிடம்

கிளி/ தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தில் பின்வரும் பதவி நிலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. மரவேலைப் பயிற்சி நெறி (Wood work)
2. மேசன் பியிற்சி நெறி (Masonry)
3. நீர்க்குழாய் பொருத்தல் பயிற்சி நெறி (Plumbing)
4. மின்னொட்டு பயிற்சி நெறி (Welding)

கல்வித் தகைமை:- உரிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வழங்கப்பட்ட தொழில்நுட்பச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

உரிய துறையில் மேலதிக பயிற்சிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

ஒரு வருடத்திற்கு குறையாத கற்பித்தல் அனுபவம் இருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமையுடையோர் எதிர்வரும் 01/ 03/ 2005 க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கவும்.

முகவரி:-
அதிபர்,
தொழில்நுட்பக்கல்வி நிறுவனம்,
கிளிநொச்சி.

(சி.11520)


இங்கே வெட்டவும்




நெஸ்பிறே பா... வாங்குங்கள்!

பால்மா பிரியர்களுக்கு கிளிநொச்சி அம்மன் களஞ்சியம் வழங்கும்

மாபெரும் பரிசுப்போட்டி

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்!

நெஸ்பிறே 400கிராம் பைக்கற்றின் மேல்ப்பகுதியை வெட்டிஅதன் பின்புறம் பெயர் விலாசம் ஆகியவற்றை எழுதிதினமும் கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்புவதன் மூலம் மாதத்தில்ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஒரு ஏசியா ஈருருளிக்கு உரிமையாளராகுங்கள். இப்போட்டி பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி முடிவடையும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வெற்றியாளரின் பெயர் விபரம் அடுத்து வரும் நாளிதழில் பிரசுரிக்கப்படும்.

வன்னிப்பகுதிக்கான முகவராண்மை பெற்றவர்கள்:

அம்மன் களஞ்சிய ஊழியர்கள் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

அம்மன் களஞ்சியம்
யாழ்சாலை, கிளிநொச்சி. தொ.பே:021-228 5852, 5077

அனுப்பவேண்டிய முகவரி:
நெஸ்பிறே பரிசுப்போட்டி
ஈழநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி.

கிழமை தோறும் ஒரு ஏசியா ஈருருளி உரிமையாளராகுங்கள்!



இப்போட்டியில் வன்னிப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும்.

(சி-11254)

## மாணவப் பருவம் அருமையானது இந்த நாட்கள் திரும்பக்கிடையாது




மாணவப் பருவம் அருமையானது. இந்த நாட்கள் திரும்பக் கிடைக்காது. இந்தப் பருவத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். படிக்க வேண்டிய நேரத்தில் படிப்பில் கவனம் செலுத்துங்கள். விளையாடும்போது முழுக் கவனத்தையும் விளையாட்டில் செலுத்துங்கள். நான் அப்படித்தான் செய்தேன் என்று இந்தியாவின் வேகப்பந்து வீச்சாளர் இர்பான் பதான் தெரிவித்தார். நேற்று முன்தினம் தனியார் தொலைக்காட்சி ஒன்றின் விளம்பர தூதராக பாடசாலை ஒன்றிற்கு சென்றிருந்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாணவ, மாணவிகளின் பல்வேறு கேள்விகளுக்குப் பதில் அளித்த இர்பான். அவருக்குப் பிடித்த பாடம் அறிவியலாம். 'பிடித்த கிரிக்கெட் வீரர்?' என்ற கேள்விக்கு 'வாசிம் அக்ரம்' என்று பதிலளித்தார். வாசிம் சாதனையைப் எப்போது முறியடிப்பீர்கள்? என்று மாணவன் மீண்டும் கேட்க அவர் 15 வருடங்கள் விளையாடி இவ்வளவு சாதித்தார். நான் விளையாட வந்து ஒரு வருடம்தானே ஆகிறது? என்றார். சிக்கலான ஒரு கேள்வியும் அவரிடம் கேட்கப்பட்டது. நீங்கள் விரும்பும் மிருகமாக மாறலாமென கடவுள் வரம் தந்தால், என்பதே கேள்வி இர்பானின் பதில் இதுதான். கடவுள் என்னை மனிதப் பிறவியாக... மனிதனாகப் படைத்திருக்கிறார். அவரது படைப்பில் நான் சந்தோஷமாக, திருப்தி யாக இருக்கிறேன். ஒரு வேளை, நான் மிருகமாக மாறவேண்டும் என்று கடவுள் விரும்பினால்... எந்த மிருகமென்று தேர்வு செய்யும் வாய்ப்பெல்லாம் அவர் எனக்குத் தரமாட்டார் என்றார்.

## இந்தியாவுக்கு எதிரான போட்டியில் இளம் வீரர்களின் திறமை வெளிப்படும்




அணியில் பெரும்பான்மையானோர் புதுமுகங்களாக இருந்தாலும் அவுஸ்திரேலிய சுற்றுப் பயணத்தின் போது கிடைத்த அனுபவம் இந்தியாவுகெதிராக வெளிப்படும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவர் இன்சமாம் - உல் - ஹக் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

லாகூரிலுள்ள கடா·.பி மைதானத்தில் பாகிஸ்தான் அணியினர் வெள்ளிக்கிழமை பயிற்சியிலீடுபட்டனர். பின்னர் நிருபர்களிடம் பேசுகையில் இன்சமாம் கூறியதாவது;

இந்தியச்சுற்றுப் பயணம் சுலபமாக இருக்காதென்பதை அனைவரும் உணர்ந்துள்ளோம். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான சுற்றுப்பயணத்தின்போது அணியின் இளம் வீரர்கள் இக்கட்டான நேரத்தில் எவ்வாறு விளையாட வேண்டும் என்பதை கற்றுள்ளனர். அந்த அனுபவம் இந்தியச் சுற்றுப் பயணத்தில் வெளிப்படுமென்ற நம்பிக்கை உள்ளது.


அனைவரும் இந்தியாவுடன் விளையாட ஆவலாக உள்ளோம். அனைத்துப்போட்டிகளிலும் வெல்ல வேண்டும் என்ற இலக்கோடுதான் விளையாடுகிறோம். என பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சமாம் தெரிவித்துள்ளார். ஆறு ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு பாகிஸ்தான் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறது. மூன்று டெஸ்ட் போட்டிகள் மற்றும் ஆறு ஒரு நாள் போட்டிகளில் அந்த அணி விளையாடவுள்ளது. முதல் டெஸ்ட் போட்டி மொகாலியில் மார்ச் எட்டாம் ஆம் திகதி தொடங்குகிறது.



இந்தியச் சுற்றுப் பயணத்திற்கு முன்பாக லாகூர் கடா·.பி மைதானத்தில் சனிக்கிழமை பயிற்சியிலீடுபட்ட பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் (இடமிருந்து) தலைவர் இன்சமாம் - உல் - ஹக், யூசுப் யுகானா, யூனிஸ் கான், அர்ஷத் கான் (பின்புறம்)

## பாகிஸ்தானுடனான முதலாவது டெஸ்ட் போட்டி

## 14 பேர் கொண்ட இந்திய அணி அறிவிப்பு




பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கெதிராக மொகாலியில், வரும் மார்ச் எட்டாம் திகதி தொடங்கும் முதல் டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியில் தமிழகத்தின் விக்கெட் காப்பாளர் தினேஷ் கார்த்திக் இடம் பெற்றுள்ளார்.

இப்போட்டிக்கான 14 பேர் கொண்ட இந்திய அணி சனிக்கிழமை அறிவிக்கப்பட்டது. காயம் காரணமாக விளையாடாமல் இருந்த சச்சின் டெண்டுல்கர், வேகப்பந்து வீச்சாளர்கள் இர்பான்பதான், லட்சுமிபதி பாலாஜி, ஆஷிஷ் நெஷ்ரா ஆகியோரும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயலர் எஸ்.கே. நாயர் இது குறித்து நிருபர்களிடம் கூறியதாவது: விக்கெட் காப்பாளருக்கான இடத்துக்கு பார்த்திப் பட்டேல், எம்.எஸ்.தோனி மற்றும் தினேஷ் கார்த்திக் ஆகியோரின் பெயர் பரிசீலிக்கப்பட்டது. இதில் தினேஷ் கார்த்திக்கிற்கு மேலும் ஒருவாய்ப்பை அளிப்பதென்று முடிவு செய்யப் பட்டது. மற்ற இருவரின் பெயரும் இத் தொடரின் மற்ற போட்டிகளின் பொது பரிசீலிக்கப்படும்.

அதேபோல் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டங்களில் சிறப்பாக விளையாடியுள்ளதால் யுவராஜ்சிங் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். முகமது கை·ப்பும் சிறப்பாக விளையாடியுள்ளார். தொடரின் மற்ற போட்டிகளின் போது அவருடைய பெயரும் பரிசீலிக்கப்படும்.மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் போட்டித் தொடருக்கு சௌரவ் கங்குலியே தலைவராக இருப்பார்.

காயம் காரணமாக உள்நாட்டுப் போட்டிகளில் விளையாடாமல் இருந்த சச்சின் டெண்டுல்கர் மற்றும் இர்பான் பதான், சாகீர்கான், ஆஷிஷ் நெஷ்ரா, பாலாஜி ஆகியோரும் உடல் தகுதியைப் பெற்றுள்ளதாக உடலியக்க நிபுணர் தெரிவித்துள்ளார். அதையடுத்து அவர்கள் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

டெஸ்ட் அணி:- சௌரவ் கங்குலி(அணித்தலைவர்), ராகுல் ராவிட்(துணைத் தலைவர்), வீரேந்திர சேவாக், கௌதம் காம்பீர்,சச்சின் டெண்டுல்கர், வி.வி.எஸ்.லக்ஸ்மன், யுவராஜ் சிங், தினேஷ் கார்த்திக், சாகீர் கான், இர்பான் பதான், ஆஷிஷ் நெஷ்ரா, எல்.பாலாஜி, அனில் கும்ளே, ஹர்பஜன் சிங்.ஆகியோர் அணியில் இடம் பிடித்துள்ளனர்.

## அவுஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவது போட்டி

## நியூசிலாந்து அணியின் டஃபி நீக்கம்!



நாளை நடைபெறவுள்ள அவுஸ்திரேலியாவுக்கெதிரான நான்காவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து அணியின் டரல் ட·பி நீக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் அவரின் பந்து வீச்சு சோபையிழந்ததையடுத்து அவர் நீக்கப்பட்டுள்ளார்.

ட·பி ஆரம்பத்திலேயே நான்கு முறையற்ற பந்துகளையும், நான்கு அகலப்பந்துகளையும் வீசியதாகவும், 14 பந்துகளில் 25 ஓட்டங்களைக் கொடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இப்போட்டியில் 86 ஓட்டங்களால் நியூசிலாந்து தோல்வியடைந்ததுடன் தொடரையும் இழந்தது.

இவருக்குப் பதிலாக லான்ஸ் கமில்ட்டன் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார். ட·பி மீது ஏமாற்றமடைந்திருப்பதாகவும், அதனாலேயே கமில்ட்டன் சேர்த்துக் கொள்ளப்பட்டார் என்றும் அணித் தலைவர் பிளெமிங் தெரிவித்துள்ளார். அத்துடன் முன்னைய கடந்த இரு போட்டிகளிலும் அவரின் பந்து வீச்சு சர்வதேச தரம் வாய்ந்ததாகத் தெரியவில்லை என்றார்.

இதற்கிடையில் அவுஸ்திரேலிய அணி பந்து வீச்சாளர் பிரெட்லீயின் பந்து வீச்சு முறையும் வருந்தக்கூடியது என நியூசிலாந்து அணி பயிற்றுநர் பிராஸ்வெல் தெரிவித்துள்ளார். பிரெட்லியின் பவுன்சர் பந்தினால் நியூசிலாந்தின் மைக் பெப்ஸ் இருமுறை தலையில் தாக்கப் பட்டார்.

அதன் காரணமாக நாளை நடைபெறும் போட்டியில் அவரும் பங்கேற்கமாட்டார். பிரெட்லியின் பந்து வீச்சில் பிரண்டன் மக்கலம் கையிலும் இடுப்புப் பகுதியிலும் தாக்கப்பட்டுள்ளார். முன்னரும் கிறிஸ் ஹரிஸ், போல் வைஸ்மன் ஆகியோரும் தாக்கப்பட்டபோது லீ மன்னிப்புக் கோரியிருந்ததாக ஜோன் பிராஸ்வெல் குறிப்பிட்டார்.

### இல்லமெய்வன்மை போட்டி

(உடையார்கட்டு)

உடையார்கட்டு குரவில் தமிழ் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் செ. மேகநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு புதுக்குடியிருப்புக் கோட்டக் கல்வி அதிகாரி ஜி.எஸ். பரமேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (19)

## காத்திருக்கும் பாக். கிரிக்கெட் ரசிகர்கள்



மொகாலியில் மார்ச் எட்டாம் திகதி தொடங்கும் இந்திய, பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டிக்காக பாகிஸ்தானின் லாகூரில் உள்ள கடா·.பி மைதானத்தில் வஸா பெறக்காத்திருக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் ரசிகர்கள்.

## செரீனாவுடன் மோதும் மற்றுமொரு வாய்ப்பு கிடைக்கும்




துபாய் மகளிர் ஓபன் டென்னிஸ் போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸுடன் மோதும் மற்றொரு வாய்ப்புக் கிடைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார் இந்தியாவின் இளம் டென்னிஸ் புயல் சானியா மிர்சா.

துபாயில் இன்று தொடங்கும் துபாய் ஓபன் டென்னிஸ் போட்டியில் பங்கேற்கும் சானியா வெள்ளிக்கிழமை பயிற்சியில் ஈடுபட்டார்.

அவுஸ்திரேலிய ஓபன் போட்டியின் மூன்றாவது சுற்றில் 1-6, 4-6 என்ற கணக்கில் செரீனாவிடம் தோல்வியடைந்தேன். அப்போட்டியின் வீடியோவை பார்த்தேன். அப்போட்டியில் செரீனா வெற்றிக்குப் போராடியது தெரிந்தது.

சற்று அதிர்ஷ்டமும் இருந்திருந்தால், அப்போட்டியை மூன்று செட் கொண்டதாக இட்டுச் சென்றிருக்கலாம் என்றார்.



## சிந்தனைக்கு



நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக் கொண்ட உறுதி கொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின்றால்; எந்தவொரு சக்தியாலும் எம்மை அசைக்கவோ அழிக்கவோ முடியாது

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 28-02-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## பேசிப் பயன் என்ன?

ஸ்ரீலங்கா அரசாங்கத்துடன் அதாவது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன், இனப்பிரச்சினை தொடர்பாகப் பேச்சுவார்த்தை எதனையும் நடாத்தித் தீர்வு காண முடியுமா? அதுவும் இக் கூட்டணி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினை தொடர்பாக ஏதாவது இணக்கப்பாட்டிற்கு வரமுடியுமா? வந்தாலும் அமுலாக்கம்தான் செய்யமுடியுமா?

இத்தகைய கேள்விகள் தனியாக தற்பொழுது ஆட்சிசெய்யும் ஐ.ம.சு முன்னணிக்கு மட்டும் உரித்தானதாக இல்லைத்தான். ஏனெனில் கடந்த சகல அரசாங்கங்களும் இதே நிலையில்தான் இருந்தன. சிலவேளைகளில் அவ்வாறு நெருக்கடிகள் அற்ற நிலை காணப்படினும், அத்தகைய அரசாங்கங்கள் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண விளையவில்லை. ஆனால், தற்பொழுது பேச்சுவார்த்தைகள் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட வேண்டியதாக இருப்பதினாலேயே இத்தகைய கேள்வியை எழுப்ப வேண்டியதாகியுள்ளது. ஏனெனில் முன்னெப்பொழுதும் இல்லாத அளவில் ஆளும் கூட்டணி அரசாங்கத்துக்குள் முரண்பாடு தீவிர மாகவுள்ளது.

இன்றைய ஐ.ம.சு முன்னணி அரசாங்கம் அண்மைக் காலத்தில் இலங்கையை ஆட்சிசெய்த அரசாங்கங்களில் மிகவும் பலவீன மானது. இவ் அரசாங்கம் அமைக்கப்பட்டபோதே அது சிறுபான்மை அரசாங்கமாகவே இருந்தது. தற்பொழுது கூட அரசாங்கம் அறுதிப் பெரும்பான்மையுடன் இருக்கின்றதா என்ற கேள்வியுடன் உள்ளது.

சிறுபான்மை அரசாங்கம் என்ற விவகாரம் ஒருபுறம் இருக்க இனப்பிரச்சினை தொடர்பாக இவ் அரசாங்கத்தினால் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் தீர்வொன்றிற்கு வரமுடியுமா? என்பது முக்கியமான கேள்வியாகும். ஏனெனில் இக் கூட்டணி அரசாங் கத்துக்குள் காணப்படும் முரண்பாடானது இனப்பிரச்சினை மட்டு மல்ல, நெருக்கடி மிக்க எந்தப் பிரச்சினைக்கும் தீர்வை எட்டுவதற் கான வாய்ப்புக்கள் இருப்பதாக இல்லை.

ஏனெனில் ஐ.ம.சு.முன்னணிக்குள்ளேயே பல முக்கிய விடயங் களில் இணக்கப்பாடென்பது காணப்பட்டதாக இல்லை. அதுமட்டு மன்றி இம் முரண்பாடுகள் தொடர்பாக இக் கூட்டணியில் உள்ள இருதரப்பினருமே அன்றி அதிகாரத்தில் இருப்பவர்களோ பேசித் தீர்வெனும் மனோ நிலையில் இருப்பதாகவும் தெரியவில்லை. இரு தரப்பினர் இடையேயும் ஆட்சி அதிகாரத்தில் நீடித்தல் என்பதில் மட்டுமே ஒத்த கருத்துண்டு.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோ, ஜே.வி.பி யின் நடவடிக் கைகளினால் பெரிதும் விசனம் அடைந்துள்ளார். அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் திருப்தியற்றவர்கள் அரசாங்கத்தை விட்டு வெளி யேறலாம் எனச் சனாதிபதி சந்திரிகா பொதுமேடையில் வைத்து கூறுமளவுக்கு ஜே.வி.பி யின் மீது வெறுப்பு ஏற்பட்டுள்ளது.

பகிரங்கமாக வெளியாகியுள்ள தகவலின்படி, சனாதிபதி சந் திரிகா குமாரதுங்க ஜே.வி.பி யினரைச் சந்தித்துப் பேசுவதற்கே தயாராக இல்லை எனத் தெரியவருகிறது. அதேசமயம் சந்தித்துப் பேசுவதானால் சனாதிபதியால் நிபந்தனை ஒன்றும் விதிக்கப்பட்டுள் ளது. இதன் பிரகாரம் சனாதிபதியையும், ஆட்சியிலுள்ள பிரதான கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியினையும் விமர்சிப்பதை ஜே.வி.பி நிறுத்த வேண்டும் என்பதே அதுவாகும்.

இதேசமயம் ஜே.வி.பியும், சனாதிபதி சந்திரிகா குமார துங்கவையும், அவர் தலைமையிலான அரசாங்கத்தையும் காட்டமாக விமர்சிக்காமல் இல்லை. விரும்பினால் வெளியே போகலாம் என சனாதிபதி சந்திரிகா கூறியும், வெளியேறாத ஜே.வி.பி, மக்கள் ஐ.ம.சு.முன்னணிக்கே ஆட்சி அமைக்க அங்கீகாரம் வழங்கியுள்ள னர். இதன் பிரகாரம் தற்போது கூட்டணி ஆட்சியில் திருப்தியில்லை யென்றால் அவர்கள் வெளியேறலாம் எனத் தெரிவித்திருப்பதன் மூலம் ஆட்சி [illegible] தாமே என்ற அர்த்தத்திலும் ஜே.வி.பி பேசுகிறது.

இந்த வகையில் சனாதிபதி சந்திரிகாவும், ஜே.வி.பி யும் பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதோடு, முரண்டு பிடிக்கும் நிலையும் காணப்படுகையில், இவ் இரு தரப்பும் வெளிப்படையாகவே முரண் பாடான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் இனப்பிரச்சினை தொடர் பான விடயத்தில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையில் இணக் கம் ஒன்றிற்கு வருவார்கள் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

ஆ[illegible]னால், இனப்பிரச்சினைக்கு சந்திரிகா குமாரதுங்க தலைமை யி[illegible] அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதினால் எந்தவித பயனும் ஏற்[illegible]போவதில்லை; ஏற்படும் என எதிர்பார்ப்பதும் மடமை யேயா கும் [illegible]கையினால், இனப்பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சு வார்[illegible]த மூலம் தீர்வு சாத்தியமாகும் என்ற கருத்தை வலுப்படுத்த முனை[illegible]வர்கள் தமிழ் மக்களை ஏமாற்ற முற்படுகின் றனர் என்றே கொள்[illegible]ளவேண்டியதாக இருக்கும்.

[illegible] அனைத்தும் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அ[illegible] தீர்வு கா[illegible] வேண்டும் எனக்கோரும் நாடுகளுக்கும் தெ[illegible]ந்தொன்றல்ல. ஆனால் அவ் அரசுகள் இவற்றை வெளிப் படு[illegible]து. சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து வலியுறுத்தி வருகி[illegible]மையானது அந்நாடுகளின் நிலைப்பாடு குறித்தும், தமிழ் மக்க[illegible]மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்து வதாகவேயுள்ளது.

# கிளி.கல்வி வலயப் பாடசாலைகளுக்கு 92 பேர் ஆசிரியர்களாக நியமனம்

(அலுவலக செய்தியாளர்)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள தமிழ்மொழி மூல அரசாங்கப் பாடசாலைகளுக்கு இலங்கை ஆசிரிய சேவையின் 3 II வகுப்பை சேர்ந்த தமிழ் மொழி மூல ஆட்சேர்ப்புச் செய்தல் 2003 இன் பிரகாரம் க.பொ.த.உயர் தரத்தில் சித்தி எய்தி யோருக்கான ஆசிரியர் நியமனத்தில் கிளி. கல்லி வலய பாடசாலைகளுக்கென 92 பேர் நியமனம் பெற்றுள்ளனர்.

கிளி.கண்டாவளைக் கோட்டத்திற்கு 43 பேரும், கிளி பூநகரிக்கோட்டத்திற்கு 39 பேரும், கரைச்சிக் கோட்டத் திற்கு 10 பேருமாக மொத்தம் 92 பேருக்கு ஆசிரியர் நியமனம் கிடைக்கப்பெற்றுள்ளது.

நியமனக்கடிதங்கள் மற்றும் கடமை ஏற்கும் பாட சாலை பெயர் விபரங்கள் உரியவர்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதெனவும் நாளை குறிப்பிடப்பட்ட அந்தந்த பாடசாலைகளில் கடமையினை ஏற்கும் வண்ணம் கிளி.வலய கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் வேண்டியுள்ளார்.

நியமனம் பெற்றோர் விபரம் வருமாறு;

### நடனம்

செல்வி.இராஜபகதூர் டொறின் சுதர்சினி இராம நாதபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, செல்வி.கிருஷ்ணபிள்ளை கிருஷாந்தி முருகானந்தா மகாவித்தியாலயம், செல்வி.பரமநாதன் கல்யாணி கண்டாவளை மகாவித்தியாலயம்.

### விவசாயம்

தனுஷ்கோடி ஜெயக்குமார் கறுக்காய்தீவு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

### உ.ந.உ.தொ.நு

மகேந்திரம் பிரதீஸ் இராமநாதபுரம் மகா வித்தியாலயம், கந்தப்பு பரமேஸ்வரன் கண்ணகியம் மன் வித்தியாலயம், தம்பிராசா கலையமுதன் பூநகரி ம.வித்தியாலயம், சோமசுந்தரம் சோமச்சந்திரன் பாரதி வித்தியாலயம், வசந்தகுமார் ஸ்ரீதரன் வேரவில் இந்து ம.வித்தியாலயம், ஆறுமுகம் இராஜபாலசிங்கம் பூநகரி நல்லூர் ம.வித்தியாலயம், செல்வி.நந்த கோபால் வதனராணி புனித அந்தோனியார் வித்தியா லயம், வைத்தீஸ்வரன் சிவதரன் வேரவில் இந்து ம.வித்தியாலயம், திருமதி.சர்வேந்திரன் கஜேந்திரா தேவி புன்னை நீராவியடி அ.த.க.பாடசாலை.

### சித்திரம்

இராமச்சந்திரன் சுகந்தன் இராமநாதபுரம் கி.அ.த.க.பாடசாலை, மாரியப்பன் சுகந்தன் இரணைதீவு றோ.க.த.க.பாடசாலை, சின்னத்தம்பி சுபா கரன் வேரவில் இந்து ம.வித்தியாலயம், செல்வ ராசா விஜிதன் முருகானந்தா ம.வித்தியாலயம்.

### மனைப்பொருளியல்

திருமதி.கிளின்ரஸ் கஜாவல்லி புன்னை நீராவி அ.த.க.பாடசாலை, செல்வி.தர்மகுலசிங்கம் லோகேஸ்வதி கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயம.

### உடற்கல்வி

பாலகிருஷ்ணன் தணிகைவேள் இராமநாதபுரம் கி.அ.த.க.பாடசாலை, இராமச்சந்திரன் முகுந்தன் முரு கானந்தா ம.வித்தியாலயம், யோகேஸ்வரன் விமலன் பரந்தன் இந்து வித்தியாலயம், இராசலிங்கம் கஜ முகன் கண்டாவளை ம.வித்தியாலயம், மகேந்திரம் சசிக்குமார் தருமபுரம் வித்தியாலயம், பவளகாந்தன் ஜெயகரன் பிரமந்தனாறு ம.வித்தியாலயம், பரராஜ சேகரம் பார்த்தீபன் புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயம், விவேகானந்தன் சாரங்கன் புனித அந்தோனியார் றோ.க.த.க.பாடசாலை, சாந்தநாதன் பிரியாங்கன் பாரதி வித்தியாலயம், தங்கவேலு புஸ்பரத்தினம் இரைணதீவு றோ.க.த.க.பாடசாலை, பாலசிங்கம் வாசுதேவன் முழங்காவில் ம.வித்தியால யம், துரைராசசிங்கம் வாகீஸ்வரன் நாச்சிக்குடா அ.த.க.பாடசாலை, அன்ரனி செல்விநாயகம் சார்ல்ஸ் இன்பதாஸ் வேரவில் இந்து ம.வித்தியாலயம், நவரத் தினம் சஞ்சீவ் பூநகரி ம.வித்தியாலயம், செல்வநாயகம் சிவபாலசுந்தர் ஜெயபுரம் அ.த.க.பாடசாலை, நவரத் தினம் சுகந்தன் பூநகரி ஸ்ரீவிக்கினேஸ்வரா வித்தியா லயம், முத்தையா நவதீபன் ஜெயபுரம் அ.த.க.பாட சாலை.

### சங்கீதம்

செல்வி.சின்னத்தம்பி வசந்தமலர் புன்னை நீராவி அ.த.க.பாடசாலை, செல்வி.சொர்ணலிங்கம் கவிதா ஜெயபுரம் அ.த.க.பாடசாலை, செல்வி.ரகுநாதன் தட்சாயினி பூநகரி ம.வித்தியாலயம்.

### கணிதம்

செல்வி.குணரத்தினம் சர்மினி இராமநாதபுரம் கி.அ.த.க.பாடசாலை, செல்வி.பாலச்சந்திரன் தர்சினி முருகானந்தா ம.வித்தியாலயம், செல்வி.சிற்றம்பலம் சுதர்சினி கண்டாவளை வித்தியாலயம், செல்வி. கிருஷ்ணராஜா துவாரகா தருமபுரம் ம.வித்தியாலயம், செல்வி.நடராசா பிரியதர்சினி பிரமந்தனாறு ம.வித்தி யாலயம், சின்னையா சிவராசன் புன்னை நீராவி அ.த.க.பாடசாலை, தங்கராசா பகீரதன் இரணைதீவு றோ.க.த.க.பாடசாலை, சிவபாதசுந்தரம் குணசீலன் வேரவில் இந்து ம.வித்தியாலயம், செல்வி.பாலசிங்கம் சுபா உமா தர்மபுரம் ம.வித்தியாலயம், குலசேகரம் இளங்குமரன் கரியாலை நாகபடுவான் இல.02 அ.த.க.பாடசாலை, குணரத்தினம் சுரேஸ் பூநகரி ம.வித்தியாலயம், தவரட்ணசிங்கம் தர்சிகன் பூநகரி ம.வித்தியாலயம், ஆறுமுகம் யோகலிங்கம் செல்லையாதீவு அ.த.க.பாடசாலை.

### விஞ்ஞானம்

செல்வி.மயில்வாகனம் தர்மசாந்தினி கண்டாவளை ம.வித்தியாலயம், சொர்ணலிங்கம் தேவலிங்கம் இர ணைதீவு றோ.க.த.க.பாடசாலை, செல்வி.கனகாம்பிகை பரஞ்சோதி தருமபுரம் ம.வித்தியாலயம், செல்வி. செல்வநாயகம் சிவகௌரி நாச்சிக்குடா அ.த.க. பாடசாலை, செல்வி.இரத்தினவடிவேல் தயாளினி வேரவில் இந்து ம.வித்தியாலயம், அம்பிகாபதி ஐயன் முழங்காவில் ம.வித்தியாலயம், சுந்தரேஸ்வரன் சுதர்ஜன் கிராஞ்சி அ.த.க.பாடசாலை, செல்வி.திரு நாவுக்கரசு பாமினி, கண்ணகையம்மன் வித்தியாலயம்.

### ஆரம்பக்கல்வி

செல்வி.செர்மிலா சுகந்தினி வரப்பிரகாசம் குமார சாமிபுரம் அ.த.க.பாடசாலை, குணபாலசிங்கம் மயூரன் முரசுமோட்டை அ.த.க.பாடசாலை, செல்வி. பிறேமினி நடராசா மயில்வாகனபுரம் அ.த.க.பாடசாலை, பத்மநா தன் பிரதாபன் பரந்தன் அ.த.க.பாடசாலை, திருமதி. வராகினி ஜெகதீஸ்வரன் ஆனையிறவு அ.த.க.பாட சாலை, செல்வி.இந்துமதி சிவசுப்பிரமணியம் கட்டைக் காடு அ.த.க.பாடசாலை, இராசதுரை வீரவதனன் தரும புரம் இல.01 அ.த.க.பாடசாலை, சோமசுந்தரம் சிவதா சன் உமையாள்புரம் அ.த.க.பாடசாலை, நித்தியானந் தக்குருக்கள் ஜெகானந்தன் ஆனையிறவு அ.த.க.பாட சாலை, செல்வி. நந்தினி முருகேசு பிரமந்தனாறு ம.வித்தியாலயம், செல்வி.கிருஷ்ணகாந்தி சுந்தர லிங்கம் புன்னைநீராவி அ.த.க.பாடசாலை, கணேசராசா ரவீந்திரராசா தருமபுரம் ம.வித்தியாலயம், செல்வி. யசோதாதேவி தருமலிங்கம் வலைப்பாடு றோ.க.த.க. பாடசாலை, சகாதேவன் ஈஸ்வரன் கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயம், கனகசபை பஞ்சாட்சரம் இரணைதீவு றோ.க.த.க.பாடசாலை, திருமதி.அனுசா தயாபரன் பெரியகுளம் ஐயனார் வித்தியாலயம், செல்வி.கோசலாதேவி பரநிருபசிங்கம் கல்மடுநகர் அ.த.க.பாடசாலை, செல்வி.தாரணி பழனிவேல் தம்பிராசபுரம் அ.த.க.பாடசாலை, திருமதி.சந்திர வதனி உதயகுமார் கரியாலை நாகபடுவான் இல.03 அ.த.க.பாடசாலை, செல்வி.ஜெயசிதா வீரசிங்கம் கண்ண கியம்மன் வித்தியாலயம், செல்வி.சிவாஜினி சிவப்பிர காசம் நாச்சிக்குடா அ.த.க.பாடசாலை,

### ஆங்கிலம்

திருவிளங்கம் ஐங்கரன் கிளிநொச்சி மத்திய கல்லூரி, இராசயோகன் இராசசேகரன் கிளிநொச்சி இந்துக் கல்லூரி, ஏரம்பமூர்த்தி பகீரதன் புனித திரேசா பெண்கள் கல்லூரி, சுப்பிரமணியம் உதயபாலன் உருத்திரபுரம் ம.வித்தியாலயம், செல்வி.டொறின் ஆனந்தி சாமிநாதர் பூநகரி ம.வித்தியாலயம், தர்மலிங் கம் மனோகரன் கிராஞ்சி அ.த.க.பாடசாலை, செல்வி. கோசலை பரராஜசேகரன் முழங்காவில் ம.வித்தியா லயம், செல்வி.தட்சாயினி கணேசன் நாச்சிக்குடா அ.த.க.பாடசாலை, செல்வி.சிவானந்தி கிருஷ்ணசாமி வேரவில் இந்து ம.வித்தியாலயம், சிதம்பரநாதன் கதிர்மகன் இரைணதீவு றோ.க.த.க.பாடசாலை, செல்வி.கீதா தர்மலிங்கம் கரியாலை நாகபடுவான் இல.02 அ.த.க.பாடசாலை (சோ)

# வடமராட்சி கிழக்கில் முதற்கட்டமாக 30 வீடுகள் நேற்றுக் கையளிப்பு

சுனாமிப் பேரலையினால் வடமராட்சி கிழக்கில் பாதிக்கப் பட்டுள்ள மக்களுக்கான தற்காலிக வீடுகளைக்கொண்ட குடியிருப்புக்களை நோர்வே நிதிப் பங்களிப்புடன் தமிழர் புனர் வாழ்வுக்கழகம் அமைத்துவரு கின்றது. அந்தவகையில் முதற் கட்டமாக 30 வீடுகளைக் கொண்ட குடியிருப்பு ஒன்று கேவில் பகுதியில் நேற்றுக் காலை 10.00 மணியளவில் திறந்துவைக்கப் பட்டுள்ளது.

. மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்விற்கு கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் கெங்காதரன் தலைமை வகித்தார். யுத்த அனர்த்தங்களாலும் சுனாமிப் பேரலை அனர்த்தங்கள் காரணமா கவும் சாவைத் தழுவிய மக்கள் அனைவரையும் நினைவுகூர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட கடற்புலிகளின் தளபதி மங்களேஸ உரையாற்றுகையில; தற்காலிக வீடுகளைக்கொண்ட இக்குடி யிருப்பினை இன்று மக்களிடம் கையளிப்பதையிட்டு தான் மகிழ்ச்சியடைவதாகவும் இந்த குடியிருப்பினை அமைத்துள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கும் மற்றும் பல வழிகளிலும் துணைநின்று செயலாற்றிய நிறுவனங்களுக்கும் தான் நன்றி கூறுவதாகவும் தெரிவித்தார். அவ்வுரைத் தொடர்ந்து கேவில் பகுதிக்குரிய கிராம சேவையாளர் சிவலிங்கம் உரையாற்றுகையில், வடமராட்சி கிழக்கில் மேற்கொள் ளப்பட்டு வந்த அனைத்து வேலைத்திட்டங் களும் முன்பகு தியிலுள்ள இடங்க ளிலேயே ஆரம்பிப்பதும் பின்பு அவ்வேலைத திட்டங்கள் செய லிழந்து போவதுமே நடைமு றையாக இருந்து வந்துள்ளன. அதனால் தான் எல்லா வேலைத் திட்டங் களையும் வடமராட்சி கிழக்கின் ஆகக்கடைசிப் பகுதியி லுள்ள கேவில், பேப்பால்பிட்டி போன்ற. இடங்களில் ஆரம்பிக் கப்பட வேண்டுமென்று. பல தடை வைகள் எடுத்துக் கூறிவருகின் றோம் ஆனால் எதுவுமே நிறைவேற வில்லை. ஆகவே இன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் திறந்துவைக் கப்பட்டுள்ள இக்குடி யிருப்பிலுள்ள வீடுகளை மக்களிடம கையளிப்ப தையிட்டு தான் மகிழ்ச்சி யடைவதாகவும் தெரிவித் தார். இதனையடுத்து தமிழர் புனர்வாழ் வுக்கழகத்தைச் சேர்ந்த சுடர் உரையைத்தொடர்ந்து யு.என்.எச்.சி ஆர் போரூட் பிரதிநிதிகளும் தற்காலிக வீடுகளைக் கொண்ட குடியிருப் புக்களை அமைப்பது தொடர்பாகவும எதிர்காலத்தில் நிரந்தர குடியிருப் புக்களை அமைப்பதற் கான தங்க ளது பங்களிப்புக்கள் எவ்வாறு இருக்கும் என்பது பற்றியும் விளக் கியிருந்தனர்.

இந்நிகழ்வில் தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தைச் சார்ந்த சுனாமிப்பேரலை அனர்த்த வேலைத்திட்ட ஒருங்கிணைப்புப் பணிப்பாளர் வின்சன், சுனாமிப் பேரலை அனர்த்த அவசரகால செயலணிக்குழு இணைப்பாளர் சுடர் மணி ஆகியோர் உட்பட பல பொதுமக்களும் கலந்து கொண் டனர். தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்ட இணைப்பாளர் ராஜனின் நன்றியு ரையுடன் வீடுகளில் குடியமரவி ருக்கும் குடும்பங்களுக்கு வீடுகளுக்குரிய திறப்புக்களும் கையளிக்கப்பட்டு நிகழ்வு இனிதே நிறைவுபெற்றது.

## பயிற்சியின் போது கைக்குண்டு வெடி... திருமலையில் ஏழு படையினர் காய...

இராணுவத்தின் பயிற்சி நட வடிக்கையின் போது கைக்குண்டு ஒன்றுதவறுதலாக வெடித்துள்ளது. இந்த குண்டு வெடிப்பில் ஏழு இராணுவத்தினர் காயமடைந்துள் ளதாக அறிவிக்கப்பட்டுள்ள... திருகோணமலையில் இந்தச் ... வம் இடம் பெற்றுள்ளதாக இரா... வப் பேச்சாளர் பிரிகேடியர் தய... னாயக்கா தெரிவித்துள்ளார்.

## உழவு இயந்திரம் குளத்தில் வீழ்ந்த... குடும்பஸ்தர் மூழ்கிப் பலி

வவுனியாவில் நேற்று குளக்கட்டின் மீது உழவு இயந்திரத்... சென்றவேளை அது தடம் புரண்டு குளத்திற்குள் வீழ்ந்ததில் குடும்ப... ஒருவர் பலியானார்.இரவு வயலில் சூடு அடித்து விட்டு நே... அதிகாலை 2.30 மணியளவில் சாஸ்திரிகூளாங்குளம் குளக்கட்... வீடு திரும்பிக் கொண்டிருந்த போது உழவு இயந்திரம் தடம் புர... குளத்தினுள் வீழ்ந்ததன் காரணமாக இவர் இறந்திருப்தாக பொலி... கூறினர்.39 வயதான காளியப்பன் பிரேமநந்தா என்... பிள்ளைகளின் தந்தையாரே இறந்திருப்பதாக பொலி... தெரிவிக்கின்றனர். மிகவும் குறுகிய குளக்கட்டில் இவர் ... இயந்திரத்தில் வந்ததன் காரணமாகவே உழவு இயந்திரம் தடம் பு... இவர் இறந்திருப்பதாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

# இந்தியா புறப்பட முன் கதிர்காமர் அமெரிக்க காங். பிரதிநிதிகளை சந்தித்த...

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியா விற்கு விஜயம் செய்வதற்கு முன்பாக அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகளை சந்தித்து பேசி யுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு ஒன்பது பேர் கொண்ட அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள் விஜயம் செய்துள் ளனர். இவர்கள் அமெரிக்க நிதி யுதவியில் மேற்கொள்ளப்படும் மீள்கட்டுமான பணிகளை பார் வையிடுவதற்கென இலங்கை... வருகை தந்துள்ளனர்.

## அரசின் சமாதானச் செயந்நிட்டத்தை எதிர்ப்பதந்கு ஜே.வி.பி .க்கு உரிமையில்லை

### -ஐ.தே.க.பா.உ பந்துலகுணவர்த்தன

அரசாங்கத்தின் சமாதான செயற்றிட்டத்தை எதிர்ப்பதற்கு ஜே.வி.பிக்கு நியாயமான உரிமை இல்லையென ஐ.தே.க.தெரிவித்துள்ளது. ஜே.வி.பி கூட்டமைப்பு அரசாங்கத்தின் முக்கிய பங்காளரென நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஐ.தே.கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவாத்தன தெரிவித்துள்ளார். அவர் மேலும் கருத்துதெரிவிக்கையில் :- சனாதிபதி சார்பாக சமாதான செயலக முக்கியஸ்தர் தனபால மிகவும் தெளிவாக கூறியிருந்தார். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை உயிருக்கு நிகராக பாதுகாப்பதற்கு அரசு கடமைப்பட்டுள்ளது. இதனடிப்படையில் புலிகள் இயக்கத்துடன் விரைவில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு தயாரென அரசின் சார்பில் அவர் கூறினார். அதனால் இடைக்கால நிர்வாகத்தை வழங்கு வதற்காகவும் நிதியை பகிர்ந்த...க்கும் செயற்றிட்டத்தை தயாரிப்பதற்கா கவும் எதிர்வரும் இரண்டு வாரகாலத்திற்குள் மிகவும் தெளிவாக அரசு பயணம் செய்யும் என்பதை தற்போது மக்கள் தெளிவாக புரிந்துகொண்டுள்ளனர் என மேலும் தெரிவித்துள்ளார்.

## டிப்ளோமா பாடநெறி... விண்ணப்பித்தல்

இதுவரை கல்வி டிப்ளோ... பட்டம் பெற்றுக்கொள்... ஆசிரியர்கள் தேசியக்க... நிருவகம் நடத்தும் மேற்பட... நெறியை முல்லைத்தீவு ... நிலையத்தில் பயில விண்ண... கலாம். விண்ணப்பப் படிவ... வுறுத்தல் என்பவற்றைப் பெ... கொள்ள ரூபா 200 பணத்... சிரேஷ்ட விரிவுரைய... க.சரவணபவன் அவர்க... வரும் ஐந்தாம் திகதிக்கு ... தொடர்பு கொள்ளுமாறு முல்... தீவு வலயக் கல்விப் பணிப்... கேட்டுக் கொள்கின்... முல்லைத்தீவு மாவட்டப் பாட... ஆசிரியர்கள் இந் நிலை... தினூடாகவே விண்ணப்... வேண்டும் என்பதைக் கவன... கொள்க.

# தற்காலிக குடியிருப்புக்களை அமைக்க கல்முனையில் பொலிசார் முட்டுக்கட்டை

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை குடியமர்த்துவதற்கு தற்காலிக குடியிருப்புக்களை அமைக்கும் பணிகள் சிறிலங்கா பொலிசாரின் தலையீட்டினால் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. கல்முனை தரவைப் பகுதியில் அமைக் கப்பட்டுக்கொண்டிருந்த முகாமே பொலிசாரின் தலையீட்டை அடுத்து கைவிடப்பட்டுள்ளது. தரவைப் பிள்ளையார் கோவிலில் தங்கியுள்ள அகதிகளை மீளக்குடியமர்த்தும் நோக்கிலேயே இந்த முகாம் அமைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இந்த விடயம் குறித்துவிசேட அதிரடிப்படையின் கவனத்திற்குகொண்டு செல்லப்பட்டதாகவும் அதனை அடுத்து முகாம் அமைக்கும் பணிகளைத்தொடர அனுமதிக்குமாறு பொலிசாருக்கு விசேட அதிரடிப்படையினர் உத்தரவிட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி யுள்ளன.

### நாட்டுப்பற்றாளர்...

லுக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலிசெலுத்தியதைத் தொடர்ந்து தமிழீழ நிதித்துறைப்பொறுப்பாளர் தமிழேந்தி,தமிழீழ காவல் துறைப்பொறுப்பாளர் பா.நடேசன்,தளபதி கேணல் தீபன்,தளபதி கேணல் ஜெயம் தளபதி கேணல் விதுஷா, தளபதி கேணல் துர்க்கா ஆகியோர் மலர்மாலை அணிவித்து இறுதிவணக்கத்தை தெரிவித்து கொண்டனர்.

தொடர்ந்து. தமிழீழ கல்விக்கழக துணைப் பொறுப்பாளர் அருள் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இறுதிவணக்க நிகழ்வில் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் அருட்திரு யோசெப் அடிகள்,கிளி.வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், செஞ்சோலைப்பொறுப்பாளர் செல்வி.சுடர்மகள்,யாழ்மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடக இணைப்பாளர் கனகலிங்கம் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் க.வே.பாலகுமாரன் ஆகியோர் வணக்க உரைநிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து தளபதிகள் பொறுப்பாளர்கள் போராளிகள்,பொதுமக்கள், உற்றார்,உறவினர்கள் புகழுடலுக்கு மலரஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் நாட்டுப் பற்றாளர் வே.க.ஏரம்பு அவர்களின் புகழுடல் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் ஊர்வலமாக திருநகர் பொது மயானத்திற்கு பகல் 12.30 மணிக்கு வந்தடைந்து அங்கு அன்னாரின் புகழுடல் தீயுடன் சங்கமமாகியது. (சோ,கு)

### பிறர்....

இவ்வாறு நேற்று நாட்டுப் பற்றாளர் வே.க.ஏரம்பு அவர்களின் இறுதி வணக்க நிகழ்வில் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் வே.பாலகுமாரன் கலந்து கொண்டு வணக்க உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஏரம்பு ஐயா அவர்கள் பிறருடைய இயல்பை ஏற்றுஅவர்களுடன் இணைந்து செயற்படும் நற்குணவாளர் அறிவோடு வாழ வேண்டும் என்பதை அவர் வாழ்ந்து காட்டியுள்ளார். விடுதலைப் போராட்ட வரலாற்றில் வாழும் வரலாறாக ஒரு தர்க்க ரீதியான முடிவை எய்திய ஒரு பெரிய மனிதன் அவர். தந்தை செல்வாவின் போராட்டம் முதல் போராட்ட வித்துக்களுடன் இணைந்து செயற்பட்டுள்ளார். அதற்காக கொடுமைகளுக்கு உட்பட்டுள்ளார். அவர் எம் தேசத்தின் ஆன்மாவாக வாழ்வார் என மேலும் தெரிவித்தார். (சோ)

### இளவரசர்...

விசேட பாதுகாப்பு பிரிவினரும் மட்டக்களப்பு நகருக்கு வருகை தந்து பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இளவரசர் சார்ள்ஸ் சென்று பார்வையிடும் சுனாமியால் பாதிப்புற்ற இடங்களான நாவலடி, மட்டக்களி ஆகிய இடங்களுக்கு அரச குடும்ப பாதுகாப்பு பிரிவினர் பாதுகாப்புக் களை உறுதி செய்துள்ளதாக தெரி விக்கப்படுகிறது. இதேவேளை இளவரசர் பாராளுமன்ற உறுப்பி னர்களையோ அல்லது வேறு அதிகாரிகளையோ சந்திப்பதற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

### வீரவணக்க....

குட்டித் தம்பி, கடற்புலிகளின் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர். கடற்புலிகளைச் சேர்ந்த வினாயகம் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். இதனைத் தொடர்ந்து மேஜர் தயானந்தனின் வித்துடல் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு மதியம் 12.30 மணியளவில் எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில் லத்தில் புனித விதை குழியில் விதைக்கப்பட்டது. (கா)

### வவுனியாவில்...

லாளர்கள்,உட்படப் பலர் கலந்து கொண்டனர். இக்கலந்து ரையாடலின் முடிவில் ஆழிப் பேரலை அனர்த்தத்தால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக கொடிவாரம் ஒன்றை இன்று முதல் வரும் ஆறாம் திகதி வரை அனுஷ்டிக்க தீர்மானிக்கப் பட்டுள்ளது. (10)

### ஐக்கிய...

கப்படுகின்றது.இந்த உலங்கு வானூர்தியில் ஐக்கிய நா... சபையின் இலச் சினை பொறிக்கப்பட்டமை மற்றும் ஐக்கிய நாடுக... கொடிபறக்க விடப்பட்டமை குறித்து படைத் தரப்பிடம் அனுமதிபெற வில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.டிக்கென் நிறுவனத்திடமி... இந்த உலங்கு வானூர்தியை வாடகைக்கு அமர்த்தியுள்ள ... அலுவலகம் தமது அனுமதியை பெறாமல்அதில் மாற்றங்க... செய்தமை தவறானது என விமானப்படையின்பேச்சாளர் கப்ரன் அ... சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த மாற்றங்கள் ஏற்படுத்துவது குறி... விமானப்போக்குவரத்து அதிகார சபையிடம் உரிய அனு... பெறப்பட்டுள்ளதாகஅதிகாரசபைத் தலைவர் நிமல் ... குறிப்பிட்டுள்ளார்.ஐநா இலச்சினையுடன் இந்த உலங்கு வானூ... மூன்று தினங்களாக

பறப்பினை மேற்கொண்டு வந்துள்ள நிலையி... விமானப்படையால் இது தரையிறக்கப்பட்டுள்ளது.ஐக்கிய நாடு... இலங்கைக் காரியாலயம் விடுதலைப் புலிகளுக்குசார்பாக செய... வருவதாக குற்றச் சாட்டுகள் எழுந்தநிலையில் இந்தச் சம்... இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சாவு அறிவித்தல்

### நீ. அருமைநாதன்

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை முன்னாள் பணியாள... நீ.அருமைநாதன் அவர்கள் 27.02.2005 காலமானர். இவர் கால... சென்ற நீக்கிலாப்பிள்ளை மரியம்மா தம்பதிகளின் மகனும், லீ... காலம் சென்ற பாக்கியம் சறோ, காலம் சென்ற பத்ம... கீயூடெக்ஸ்தாபனத்தில் பணிபுரியும் என். எம்.ஜோசப்நடா, செல்வ... (கனடா) டெய்சி, அனுசியா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்... சகோதரனும், திருச்செல்வம், காலம் சென்ற பரராஜசேகரன்... உஷா, ஜெயராணி,(ஆசிரியர் கிளி.கனகபுரம் ம... முத்துராசா(கனடா), வரதன், கௌரிபாலன்(பிரான்ஸ்) ஆகியோ... அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதி வழிபாடு... மாலை 03.00 மணிக்கு நடைபெற்று, நல்லடக்கத்திற்காக பூதவு... கந்தன் குளம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும் ... அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்... கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
அக்கா
(5753) திருமதி ச.பரராஜசேகரன்

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது